தென்றல் முல்லை

Tamil Sangam of Greater Washington Inc.

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்க வெளியீடு

Thenral Mullai

A Publication of Tamil Sangam of Greater Washington Inc.

திருவள்ளுவர் ஆண்டு - 2055 | ஜூலை 2025 மலர்: 21 இதழ் : 10

உள்ளே...

வாசகர் குரல்: முந்தைய இதழைப் பற்றிய பார்வை 6
இது சுட்டிகளின் பக்கம் 7
இந்தியாவின் எடிசன் ஜி.டி.நாயுடு 8
அறிவோம்! தெரிவோம்! 10
பழமொழிகள் 11
தாய் மண்ணைத் தாண்டியும் தமிழ் வளர்ப்பில்: வட்டாரத் தமிழ் ஆர்வலர்கள் அங்கீகரிப்பு திருமதி புஷ்பராணி வில்லியம்ஸ் அவர்களுடனான நேர்காணல் 12
என் மனதைத் தொட்ட சமீப நிகழ்வு 14
தமிழோடு விளையாடு! 15
குறளோடு ஒரு கதை: நம்பிக்கையின் விதை 16
குழந்தைகளின் ஓவியங்கள் 18
இயற்கை கற்றுக் கொடுக்கும் பாடங்கள் 21
என் பார்வையில் மகாகவி பாரதியார் 22
பிரடெரிக் தமிழ்ப்பள்ளி கலை மற்றும் இலக்கியப் போட்டிகள் 2025 24
முதல் தலைமுறையின் இசைக் கனவுகள் – டிஎம்வியில் (DMV) தமிழ் அலை! 28
வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கத்தின் சித்திரைத் திருவிழா 30
மேரிலாண்ட் தமிழ்க் கல்விக் கழகத்தின் 19-வது ஆண்டு விழா 32
வாசிங்டன் தமிழ்ச்சங்கம் மற்றும் குறள் கூடல் செம்மொழி அறக்கட்டளை நிகழ்வு 35
சமீபத்திய திரைப்படங்கள்: ஒரு சிறப்புப்பார்வை 38
படைப்பும் படைப்பாளியும்: வாசகர் பார்வை கு. அழகிரிசாமி அவர்களின் “அன்பளிப்பு” 40
பெண்மை... பெருமை...பெண் அரசியல்வாதி சல்மா 43

முத்தமிழ் விழா வாழ்த்துகள்

Balagan Business & Tax Service

Balagan Business & Tax Services can provide you with assistance in all your tax, financial, and business affairs - assistance that will improve your total financial well-being.



We want you to get the best financial and tax help possible. If you have a question which is not addressed here, please contact us via

e-mail: questions@balaganfinancials.com

or by phone:

(301) 931-1040/ (703) 723-9471

Please visit our website for more information:

http://balaganfinancials.com/mobile/

தமிழ்ச்சங்கச் செயற்குழு 2025

தலைவர்
திரு. செந்தில் மலைக்கொழுந்து குமார்

துணைத்தலைவர்
திரு. சீனிவாசன் சண்முகம்

செயலாளர்
திரு. அறிவுடை நம்பி புகழேந்தி

துணைச் செயலாளர்
திரு. பாலாஜி துரைசாமி

பொருளாளர்
திரு. மணிமாறன் பாலசுப்பிரமணியன்

துணைப் பொருளாளர்
திருமதி காமேஷ்வரி சந்திரசேகர்

செயற்குழு உறுப்பினர்கள்:
திரு. கொழந்தவேல் இராமசாமி
திரு. எழில்வாணன் கலைவாணன்
திருமதி தீபா செந்தில்நாத்
திரு. பிரகாஷ் மாதேஷ்
செல்வி சுபஶ்ரீ சுசீந்தரன்
செல்வன் அஸ்வின் பாபுவிநாயகம்
திரு. அறிவுமணி இராமலிங்கம்

தலைவர் உரை

பேரன்பிற்குரிய வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் செயற்குழுவின் சார்பாக வணக்கத்தையும், முத்தமிழ் விழா வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறோம். தென்றல் முல்லையின் முத்தமிழ் விழா இதழுக்குப் பங்களித்தவர்களையும், இவ்விதழைச் செம்மையுடன் வெளிக்கொணர்ந்த ஆசிரியர் முனைவர் பாலா குப்புசாமி அவர்களையும் மற்றும் ஆசிரியர் குழுவினரையும் மனதாரப் பாராட்டுகிறோம்.

நமது சங்கத்தின் சித்திரைத் திருவிழாவானது கடந்த ஏப்ரல் மாதம் சீருடனும், சிறப்புடனும் நடந்தேறியது. இவ்விழாவின் வெற்றிக்காகப் பல்வேறு வழிகளில் உழைத்திட்ட தன்னார்வலர்களுக்கும், பங்கேற்பாளர்களுக்கும், செயற்குழு உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழுக்கே உரிய பாரம்பரிய முறைப்படி பரிமாறப்பட்ட வாழையிலை உணவு, மக்களின் உடலுக்கும் உள்ளத்திற்கும் தெம்பளிப்பதாக அமைந்தது. சிறப்பான உணவைப் பரிமாறிய சென்னை எக்ஸ்பிரஸ் உணவகத்தார்க்கு மிக்க நன்றி. அதுபோல, சிறுதானியங்களால் செய்யப்பட்ட தின்பண்டங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்ததும், மக்கள் அவற்றை விரும்பி வாங்கி உண்டதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலிருந்து வந்திருந்த "கதைசொல்லி" திரு. பவா செல்லதுரை அவர்களின் கதையும், கலந்துரையாடலும் நம் மக்களை வெகுவாகக் கவர்ந்ததில் வியப்பேதுமில்லை. சென்னையிலிருந்து வந்திருந்த " நீங்களும் பாடலாம்" மொட்டை மாடி இசைக் குழுவினரின் சிறப்பான நிகழ்ச்சி அரங்கு நிறைவான ஒன்றாக அமைந்ததும், பார்வையாளர்கள் பாடி ஆடி மகிழ்ந்ததும் பெருமகிழ்வைத் தந்தது. உங்களின் பங்களிப்பினால் மட்டுமே இது சாத்தியமானது. உங்களின் தொடர் ஆதரவிற்கு மீண்டும் நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை ஒவ்வொரு ஆண்டும் தமிழ் விழாவை அமெரிக்காவின் வெவ்வேறு மாநகரங்களில் நடத்துவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

பொறுப்புத் துறப்பு: புலம் பெயர்ந்த தமிழர்களின், தமிழ் ஆர்வலர்களின் தமிழ் மீது உள்ள ஆர்வத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, அவர்களின் படைப்புகள் தென்றல் முல்லை இதழில் வெளியிடப் படுகின்றன. ஆகவே, இந்த இதழில் வந்துள்ள படைப்புகளின் கருத்துகள் யாவும் படைப்பாளிகளின் கருத்துகள் ஆகும். எனவே, அந்தக் கருத்துகளுக்கு வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கமோ அல்லது தென்றல் முல்லை ஆசிரியர் குழுவோ பொறுப்பேற்க இயலாது.

Disclaimer: The views and opinions expressed in articles published in ThenRal Mullai are those of the authors and do not necessarily reflect the official policy or position of Tamil Sangam of Greater Washington Inc or ThenRal Mullai editorial board.

அவ்வகையில் இந்த ஆண்டு ஜூலை 3, 4 மற்றும் 5 தேதிகளில் வட கரோலைனா மாநிலத்தின் ராலே நகரில் நடைபெற்ற 38–ஆவது ஆண்டு விழாவில், நம் பகுதியிலிருந்து பெரும் எண்ணிக்கையில் கலந்துகொண்டு, சிறப்பான வகையில் தங்களின் பங்களிப்பினை நல்கிய நம் பகுதியைச் சார்ந்த பெருமக்கள் அனைவருக்கும் நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறோம்.

பேரவையின் விழாவிற்காக வந்திருக்கும் விருந்தினர்கள் சிலர், இன்று நமது முத்தமிழ் விழாவிலும் கலந்துகொள்வதில் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறோம்.

இத்தனை ஆண்டுகாலம் நீங்களெல்லாம் எவ்வாறு நம் தமிழ்ச் சங்கத்திற்குப் பேராதரவு தந்து சங்கத்தின் வளர்ச்சிக்குப் பேருதவியாக இருக்கிறீர்களோ அதுபோலவே, எதிர்வரும் காலத்திலும் நல்லாதரவு தந்து, பொன்விழாவை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கும் நமது சங்கத்தின் எதிர்கால வளர்ச்சியிலும் பங்கெடுத்துக்கொள்ளுமாறு அன்போடு உங்கள் அனைவரையும் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு தற்காலிகமாக விடைபெற்றுக்கொள்கிறோம்.

இது நமது தமிழ்ச்சங்கம்! நாம் அனைவரும் அதன் அங்கம்!!
வாழ்க தமிழ்! வளர்க நம் ஒற்றுமை!!

நன்றி வணக்கம்! அன்புடன்,

செந்தில் மலைக்கொழுந்து குமார்
தலைவர், வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம்

Email: president@washingtontamilsangam.org

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கத்துடன் தொடர்ந்து இணைந்திருங்கள்...

சமூக ஊடகத்தில் உள்ளவர்கள் நம் வாசிங்டன் தமிழ்ச்சங்கத்தின் தமிழ்ச்சங்க முகநூல் (FACEBOOK)/ புலனம் (WHATSAPP) குழுமத்தில் இணைந்திருங்கள். நம் செய்திகளை உங்கள் நண்பர்களுக்கும் பகிருங்கள்.

இணையத்தளம் : WWW.WASHINGTONTAMILSANGAM.ORG
யூடுப் சேனல் : HTTPS://YOUTUBE.COM/C/TSGWTAMILSANGAM
மின்னஞ்சல் : INFO@WASHINGTONTAMILSANGAM.ORG

Instagram
TSGWDC
WhatsApp
Social Media QR Code Connect with Us

Tamil Sangam of Greater Washington Inc.

தென்றல் முல்லை ஆசிரியர்க்குழு 2025

முதன்மை ஆசிரியர்:
முனைவர் பாலா குப்புசாமி

இணை ஆசிரியர்கள்:
திருமதி விஜயா சிவப்பிரகாசம்
திரு. முருகவேலு வைத்தியநாதன்
திருமதி ரஹீமா அலாவுதீன்
திருமதி அனிதா மதனகுரு
திருமதி அபிநயா மோகன்குமார்
திரு. கமலபாரதி பச்சியப்பன்
திரு. மோகன்ராஜ் பாலசுப்ரமணியன்
திருமதி மோனிகா ஜெரால்டு
திருமதி பானு கணேஷ்

இளம் துணை ஆசிரியர்கள்:
செல்வி இலக்கியா பாலமுருகன்
செல்வன் ரக்ஷஷன் சீனிவாசன்
செல்வி கீர்த்தனா கணேஷ்
செல்வி தியா கமலபாரதி
செல்வி சாதனா திலக்
செல்வன் விநாயக் பாபு கணேஷ்
செல்வன் சூர்யா அறிவுமணி
செல்வி ரோஷினி செல்வம்
செல்வி ஆராதனா அருண்
செல்வி மான்சி சந்திரசேகரன்

சிறப்பாசிரியர்கள்:
திரு. நாஞ்சில் இ பீற்றர்
முனைவர் மீனாட்சி சந்திரசேகரன்
திரு. இளவழுதி வீரராசு
திருமதி சுமித்ரா பாபு கணேஷ்

செயற்குழு தொடர்பாளர்கள்:
திரு. செந்தில் மலைக்கொழுந்து குமார்
திரு. அறிவுடை நம்பி புகழேந்தி
திரு. பாலாஜி துரைசாமி

முன் அட்டைப்பட ஓவியம்:
செல்வி திஷ்யலேகா இராஜேஷ்கண்ணா

இதழ் அச்சீடு நன்கொடை:
திரு. குமார் சிவலிங்கம், ipaatti Inc.

வடிவமைப்பு
திரு. இசக்கி, esakki2006@gmail.com
+91 9710755689, +91 9962505384

ஆசிரியர் உரை

தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை!

என்னுயிர்த் தமிழே!

உன்னை விட இலக்கிய வளங்களில் நிறைந்ததோர் மொழியுமில்லை!

தமிழன்னைக்கும், தமிழுறவுகளுக்கும் வணக்கம்!

அனைவரும் அன்னையர் நாள் மற்றும் தந்தையர் நாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடி இருப்பீர்கள் என்று நம்புகிறேன். நான் எழுதிய ஹைக்கூ கவிதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

உலகம்...
என்னுடையதாய் உணர்கிறேன்
என் அம்மாவின் மடியிலும், அப்பாவின் பிடியிலும்.

உண்மை தானே! உலகில் நமக்குக் கிடைத்த ஒப்பிலா உறவுகள் நம் தாயும் தந்தையரும்.

அனைத்து அன்னையர்களுக்கும் தந்தையர்களுக்கும் வாழ்த்துகள்.

பல்சுவை இதழாய் இதோ! முத்தமிழ் விழா இதழ் உங்கள் கைகளில்! படித்து, உங்களின் கருத்துகளை எங்களுக்குத் தெரிவியுங்கள். "வாசகர் குரல்" பகுதியில் உங்கள் கருத்துகள் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும். இதழை சிறப்பாகக் கொண்டு வர உழைத்த தென்றல் முல்லை சக ஆசிரிய நண்பர்களுக்கும், சிறப்பான படைப்புகளைத் தந்த படைப்பாளிகளுக்கும் என் நன்றிகள். தொடர்ந்து உங்களின் சிந்தனைகள், படைப்புகள் மற்றும் கருத்துகளை thenral.mullai@gmail.com எனும் மின்னஞ்சலுக்கு அனுப்புமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். நமது தென்றல் முல்லை இதழுக்கு தொடர்ந்து ஆதரவு தந்து வரும் நமது வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்க உறுப்பினர்கள், கொடையாளர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு எங்கள் தென்றல் முல்லை ஆசிரியர்க் குழுவின் சார்பாக மனமார்ந்த நன்றிகள்.

கோடை விடுமுறையை அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடுங்கள்.

தமிழின் தொன்மை!
அதனின் வளமை, பெருமை!
அனைவரின் உள்ளங்களிலும் இல்லங்களிலும்
தமிழ் ஒலிக்கட்டும்!
கவின்மிகு தமிழின் புகழ்
தரணியெங்கும் பரவட்டும்!
மனிதம் தழைக்கட்டும்!

மீண்டும் அடுத்த இதழில் உங்களோடு பேசுகிறேன்.

தோழமையுடன்...

முனைவர் பாலா குப்புசாமி
முதன்மை ஆசிரியர்

வாசகர் குரல்: சென்ற இதழ் பற்றிய பார்வை

தொகுப்பு: திருமதி கீர்த்தனா செந்தில்குமரன்

சில சொற்கள் நம்மை வாசிக்க வைக்கும்.

சில பக்கங்கள் நம்மை ஆழமாக யோசிக்க வைக்கும்.

சில வரிகள் நம் உள்ளத்தைத் தட்டி எழுப்பும்.

என் வாசிப்புப் பயணம் தொடங்கியது எனக்கு பசுமை வயதில் மழலையாக எழுந்த ஒரு அப்பாவித் தேடலால். "இந்தக் கதைக்குப் பிறகு என்ன நடக்கும்?"

அந்தக் கேள்விக்கு பதில் தேடித் தேடி வாசிப்பைத் தேடிச் சென்றேன். ஒரு சிறு கதையில் உணர்வைக் கண்டேன், கவிதையில் சின்ன சிந்தனையைக் கண்டேன், கட்டுரையில் பெரிய பார்வையைக் கண்டேன். அதனால் தான் தென்றல் முல்லை போன்ற வாசிப்பை ஊக்கப்படுத்தும் இதழ்கள், எனக்கு புத்தகங்களைப் போலவே நெருக்கமானவை. அவை ஒரு மாதம் மட்டுமல்ல, வாசித்த பிறகும் நம்முள் வாழும் நினைவுகளாக மாறுகின்றன.

சித்திரை வாழ்த்துகளால் இனிதாகத் துவங்கிய இதழின் தொடக்கம், மனதிற்கு ஒரு புத்தாண்டு நல்வாழ்த்தைப் போலவே இருந்தது. தலைவர் உரையும், ஆசிரியர் உரையும், வாழ்க்கை நெறிகளையும், தமிழ்மொழியின் அழகையும் நம்முடன் பகிர்ந்தன. சாதனைகள் வளர மொழிக்கான பற்றும், பங்களிப்பும் முக்கியம் என்பதை அவர்கள் நினைவுபடுத்தினர். அதே நேரத்தில், புதிய தமிழ்ச்சங்க நிர்வாகமும் அறிமுகமானது. புதிய தலைவர் மற்றும் குழுவினர் தமிழை வளர்க்கும் ஆர்வத்தையும் சமூகத்துடன் சேர்ந்து செயல்பட விருப்பத்தையும் எளிமையாக பகிர்ந்தனர். இந்த வாழ்த்துகள், உரைகள், பார்வைகள் இதழை ஒரு சாதாரண வாசிப்பாக அல்ல, மனம் தொட்ட ஒரு தொடக்கமாகவே உணர வைத்தன.

"சுட்டிகளின் பக்கம்" என் உள்ளத்தில் ஒரு குழந்தைப் பக்கத்தைத் தூண்டியது. தமிழ் எழுத்துக்களுக்கு ஒவ்வொன்றாகப் பொருள் கொடுத்து, அவற்றின் ஓசையைக் கேட்டபடியே உணர்த்திய "அறிவோம்! தெரிவோம்!" பக்கம் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அறிவியல் களப்பயணத்தில் இருந்த அந்த அனுபவம், ஒரு இளம் ஆசிரியரின் பார்வையில் அறிவியலை எளிமையாகப் புரிய வைத்தது.

6 வித்தியாசங்கள், வார்த்தைத் தேடல், தமிழோடு விளையாடு, விடுகதை, புதிர் விளையாட்டு -இவை எல்லாம் என்னை வாசகராக மட்டும் வைக்காமல், எழுதுகோல் எடுத்து பதில்கள் எழுத வைத்தது. ஒவ்வொரு பக்கமும் ஒரு விளையாட்டு போலவே இருந்தது. படிக்கவும், விளையாடவும் ஒரே நேரத்தில் எனக்கு வாய்ப்பு கொடுத்தது.

திருக்குறளை அடிப்படையாகக் கொண்டு, 'விக்ரம்-கங்குவா' நாடுகளின் கதை, சிறுவர்கள் புரிந்து கொள்ளும் விதமாக நற்பண்புகளைச் சொல்லும் ஒரு நல்ல முயற்சி.

சுனிதா வில்லியம்ஸ் பற்றிய பகுதி வானத்தைத் தொட்ட ஒரு பெண்ணின் கனவையும், அதற்குப் பின்னால் இருந்த உறுதியையும் பேசுகிறது. அவரது சாதனை,"நானும் என்எல்லைகளைத் தாண்டி பறக்க முடியாதா?" என்ற சிந்தனையை எழுப்பியது. இது வாசிப்பை ஒரு தூண்டுகோலாக மாற்றும் அற்புதப் பகுதி!

2025 ஆம் ஆண்டு ஜனவரியில் உருவான வடஅமெரிக்கா தமிழ் எழுத்தாளர் அமைப்பு தமிழ் வாசிப்பு மற்றும் எழுதும் உலகத்துக்கு ஒரு புதிய விதையைப் புதைத்தது. "எழுத்தும் வாசிப்பும் இணையும் போது, மொழி வாழும்" என்பதை உணர்த்தியது.

வாசிங்டன் வட்டாரப் பொங்கல் விழா, பிரடெரிக் தமிழ்ப்பள்ளியின் பொங்கல் விழா, மற்றும் மேரிலாந்து தமிழ்க் கல்விக்கழகத்தின் போட்டிகளின் நிகழ்வு- இவை மூன்றுமே என் மனதில் தமிழின் ஒளியை நன்கு நிலை நிறுத்திய நிகழ்வுகள். குழந்தைகளின் திறமையை மட்டுமல்ல, தமிழை நேசிக்கும் அவர்களுடைய உணர்வுகளையும் வெளிப்படுத்தி,பல குடும்பங்களை ஒன்றிணைக்கும் தாய்மொழி மேடையாக இருந்தது. இந்த நிகழ்வுகளைக் காணும் போது, ஒரு சமூகத்தின் உருமாறும் கனவுகளை தமிழின் வழியாக காணும் மகிழ்ச்சி கிடைத்தது.

உணவே மருந்து பகுதியில் அங்காயப் பொடி செய்முறையைப் படித்தபின், இது நம் வீட்டிலேயே செய்து பார்ப்போமா? என்று ஆவலைத் தூண்டியது. ஆரோக்கிய உணவிற்கும் பாரம்பரியத்திற்கும் நம்மை மீண்டும் இணைக்கும் பகுதியாக இருந்தது. "Bottle Radha" படத்தைப் பற்றிய சிறப்புப்பார்வை வாசிக்கும் போது என் கண்களுக்கு முன்னே படம் ஓடுவது போல உணர்ந்தேன். அந்த வரிகள் மூலமாக கதையும் உணர்வுகளும் நெஞ்சைத் தொட்டன.

"பெண்மை பெருமை" பகுதியில் எழுத்தாளர் சிவசங்கரி பற்றி வாசிக்கும் போது, "பெண்மையின் மென்மை பலத்தில்தான் இருக்கிறது" என்ற உண்மை அவருடைய எழுத்துக்களில் பிரதிபலிக்கிறது.

இறுதியில் இந்த இதழின் பக்கங்கள் முடிந்தாலும் அனைத்து படைப்புகளின் சிந்தனைகளும் இன்னமும் மன ஓட்டத்தில்!.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ் வாசிப்பு! மலர்க தென்றல் முல்லை!

சுட்டிகளுக்காக... சுட்டிகளோடு.... சுட்டிகளால்...

இது சுட்டிகளின் பக்கம்

(இளம் துணை ஆசிரியர்களால்)

இந்தியாவின் எடிசன் ஜி.டி.நாயுடு





ஆக்கம்: செல்வன் ஸ்ரீருத்ரேஷ் மணி,
பிரடெரிக் தமிழ்ப்பள்ளி, மேரிலாந்து.

முன்னுரை:

இயந்திரவியல் மற்றும் விவசாயம் சார்ந்த துறைகளில் எண்ணற்ற ஆராய்ச்சிகளைச் செய்து, அரிய பல கண்டுபிடிப்புகளை உலகிற்கு அறிமுகப்படுத்தி அதிசயத்தை நிகழ்த்தி, தமிழகத்துக்குப் பெருமை தேடித்தந்தவர் ஜி.டி.நாயுடு அவர்கள். இவர் கோவையை அடுத்த கலங்கல் என்ற ஊரில் 1893 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 23 ஆம் தேதி ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். இவருடைய இயற்பெயர் துரைசாமி நாயுடு, தந்தை பெயர் கோபால்சாமி. கோபால்சாமி துரைசாமி நாயுடு என்பதையே சுருக்கமாக ஜி.டி.நாயுடு என்று அன்போடு அழைத்தனர்.

இளமைப் பருவம்:

இவர் பள்ளியில் 4 ஆம் வகுப்பு வரை மட்டுமே பயின்றார். சிறு வயதில் இருந்தே, பல ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார். சிறிய விலங்குகளைப் பிடித்து, ‘உள்ளே எப்படி உள்ளது’ என்று அறுத்துப் பார்த்தார். செடிகளை தலைகீழாக நட்டு என்ன நடக்கிறது என்று ஆவலாக கண்காணித்தார். ஆந்தைக்கு இரவில் எப்படி கண் தெரிகிறது? என்பதை அறிய ஆர்வம் காட்டினார். பின்னாளில் அறிவியல் மாமேதையாக திகழ்வதற்கு, இந்த ஆராய்ச்சிகள் இவருக்குப் பெரிதும் வழிவகுத்தன.

ஆட்டோ மொபைல் பற்றிய ஆர்வம்:

ஒருநாள், ஆங்கிலேய அதிகாரி ஒருவர் மோட்டார் சைக்கிளில் செல்வதைப் பார்த்தார். அந்த மோட்டார் சைக்கிளை எப்படியாவது வாங்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. பணம் சேகரிப்பதற்காக விடுதிகளிலும் உணவகங்களிலும் பல்வேறு வேலைகளைச் செய்தார். மோட்டார்களின் செயல்பாடு குறித்த ஆராய்ச்சிகளில் ஈடுப்பட்டார். தன் 12-ஆம் வயதில், தானே வேலை செய்து ஈட்டிய பணத்தைக் கொண்டு ஆங்கிலேயரிடம் இருந்து மோட்டார் சைக்கிளை வாங்கினார். அந்த மோட்டார் சைக்கிளை முழுமையாகப் பிரித்து, பிறகு மீண்டும் பொருத்தினார். இதிலிருந்து இவரது விடாமுயற்சியை நாம் தெரிந்து கொள்ளலாம்.

விவசாயத்திலும் புதுமை:

தனது மாமாவின் விவசாயப் பண்ணையில் பருத்திச் செடிகளில் ஆராய்ச்சி மேற்கொண்டார். வேப்ப எண்ணெய்த் தயாரிப்பில் புதிய யுக்தியைக் கண்டறிந்தார். உயர்ரக ஒட்டு ரக காய், கனிகளை உருவாக்கினார்.

யுனைடெட் மோட்டார் சர்வீஸ்:

ஒரு மோட்டார் வாகனத்தை வாங்கி, அதில் சிறு மாறுதல்களைச் செய்து 1920 ஆம் ஆண்டில், பொள்ளாச்சிக்கும் பழனிக்கும் இடையே பயணிகள் பேருந்தை இயக்கினார். யுனைடெட் மோட்டார் சர்வீஸ் என்ற நிறுவனத்தைத் தொடங்கினார்.

கண்டுப்பிடிப்புகள்:

100-க்கும் மேற்பட்ட கண்டுபிடிப்புகளுக்குக் காப்புரிமை பெற்றுள்ளார். இந்தியாவில் முதன்முதலாக மின்சார மோட்டார் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை கோவையில் அமைத்ததற்கான பெருமை இவரையே சேரும். நீர் இறைக்கும் இயந்திரம், மாவு அரைக்கும் இயந்திரம், முகச் சவரக் கத்தி உட்பட பல கருவிகளை உருவாக்கினார்.

சாதனைகள்:

1936 ஆம் ஆண்டு ஜெர்மனியில் நடைபெற்ற சர்வதேச அறிவியல் கண்காட்சியில் இரண்டாம் பரிசு பெற்றார். தன்னுடைய சுயமுயற்சியினால் பாலிடெக்னிக் மற்றும் பொறியியல் கல்லூரிகளைத் துவக்கினார்.

மறைவு:

1974 ஆம் ஆண்டு ஜனவரி 4 ஆம் தேதி காலமானார். கோவை அவினாசி சாலையில் இவரது கண்டுபிடிப்புகளுடன் கூடிய கண்காட்சி மற்றும் அருங்காட்சியகம் இவரது சாதனைகளை உணர்த்தும் விதமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இவரது விடாமுயற்சியும் ஊக்கமும் அறிவாற்றலும் இவரை உலகம் போற்றும் அறிஞராக உயர்த்தியது. இவரது வாழ்க்கை வரலாறு இளைஞர்களுக்கு கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது.

ஜி.டி.நாயுடு அவர்களின் வரலாற்றுக் குறிப்புகள் பற்றி அறிய உதவிய அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகத்தின் நிலை 4 பாட நூலுக்கு நன்றி செலுத்துகிறேன்.

◆

அறிவோம்! தெரிவோம்!

வணக்கம், நீங்க எல்லாரும் ஒவ்வொரு தென்றல் முல்லை வெளியீட்டிலும், அறிவோம் தெரிவோம் பகுதியில் கடந்த இரண்டு வருடமாக என்னைப்போல் நிறைய கற்று இருப்பீர்கள். அப்படி இன்றைக்கு நீங்க கடலுக்குள் பாலத்தின் தூண்களை எப்படிக் கட்டுகிறார்கள் எனப் பார்க்கலாம் வாங்க ...

ஒரு வியப்பூட்டும் கடல் பாலம் கடலுக்கு நடுவில் உறுதியாக நிற்கும் போது, நீங்கள் யோசிக்கலாம்: "இந்தத் தூண்கள் இவ்வளவு ஆழமான கடலில் எப்படிப் பதிக்கப்பட்டன?" இது கற்பனை அல்ல — இது உயர் நிலை கடல் கட்டுமான(சிவில்) பொறியியல்.

செல்வி மான்சி சந்திரசேகரன்

1. **தொடக்கம்: கடல் ஆய்வு**

   முதல் படி கடலின் ஆழம், மண் வகை, அலை ஓட்டம், அலை வேகம் மற்றும் நிலநடுக்க அபாயங்களை முழுமையாக ஆய்வு செய்வதாகும்.

2. ***ஆழக் கொள்கலன்கள்: அடியில் இருந்து மேல் நோக்கி கட்டம்***

   - பைல்ஸ் (Piles):* இரும்பு அல்லது கான்கிரீட் தூண்கள் கடலடியில் உள்ள உறுதியான அடுக்கு வரை தள்ளப்படுகிறது.

   - கேசான்கள் (Caissons):* பெரிய கான்கிரீட் பெட்டிகள் கடலில் தாழ்த்தி, சில நேரம் பைல்களுக்கு மேலாக நிமிர்த்தப்படும்.

3. நீரை வற்றச் செய்தல்! (Cofferdams)

தூண் அமைக்கும் இடத்தைச் சுற்றி தற்காலிக இடம் உள்ளே உள்ள நீர் வெளியேற்றப்படுகிறது.

4. நீருக்கடியில் கான்கிரீட் ஊற்றுதல் (Tremie முறை)

நீரை அகற்ற முடியாதபோது, சிறப்பாக வடிவமைக்கப்பட்ட குழாய்கள் மூலம் நீரின் கீழ் நேரடியாக கான்கிரீட் ஊற்றப்படுகிறது.

5. உப்பும் அழுக்கையும் எதிர்த்து:

பராமரிக்கப்பட்ட இரும்பு மற்றும் கடல் பயன் பாட்டுக்கேற்ற கான்கிரீட் பயன்படுத்தப் படுகிறது.

6. **ஒவ்வொரு தூணும் தனிப்பட்ட திட்டம்:**

ஒவ்வொரு தூணும் தனியாக கோடிக்கணக்கான செலவில், பல பரிசோதனைகளுடன் கட்டப் படுகிறது.

என்னங்க படித்து அறிந்து தெரிந்து கொண்டீர்களா? நீங்களும் உங்களுக்குத் தெரிந்தவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். மீண்டும் சந்திப்போம் அடுத்த தென்றல் முல்லையில் .. நன்றி வணக்கம் உங்களிடமிருந்து விடை பெறுவது மான்சி சந்திரசேகரன்.

பழமொழிகள்

தொகுப்பு: செல்வன் ரக்ஷன் சீனிவாசன்

"அறிவே ஆற்றல் என்பது = அது ஒருவரின் வாழ்க்கையையும், ஒருவர் தன்னைப் பார்க்கும் விதத்தையும் மாற்றும். ஊரார் வீட்டு நெய்யே என் பொண்சாதி கையே என்பது = ஊரார் வீட்டின் விருந்தோம்பலில் நெய் இட்டாலும் அது என் பொண்டாட்டியின் கைப் பக்குவத்திற்கு ஈடாகுமா? என்று வினவிய சொல்.

ஆபத்துக்கு பாவமில்லை என்பது = யாராவது ஆபத்தில் இருக்கிறார் என்றால், அவர் யார்? எவர்? எப்படிப்பட்ட குணமுடையவர்? எந்த சாதி? எந்த மதம்? என்றெல்லாம் பார்க்காமல் உடனடியாக அவருக்குத் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும்; இதில் பாவ-புண்ணியம் பார்க்கக்கூடாது என்பதற்காகத்தான் இப்படியொரு முதுமொழியைச் சொல்லி வைத்தனர் நம் முன்னோர்.

ஆழம் தெரியாமல் காலை விடாதே என்பது = நீரின் ஆழத்தை அறியாமல் அதில் காலைவிட்டால், நீரினுள் மூழ்க நேரிடும். ஆழமறிந்து அதில் இறங்க வேண்டும். அதைப்போன்று எந்தச் செயலிலும் நன்கு ஆராய்ந்து பார்த்துச் செயல்பட வேண்டும். அவ்வாறு செய்தால் பின்னால் வருந்த வேண்டியிராது.

ஆலும் வேலும் பல்லுக்குறுதி என்பது = ஒரு பழமொழி. ஆலமரக் குச்சியும், வேலமரக் குச்சியும் பல் விளக்கும் பற்தூரிகையாகப் பயன்படுத்தினால், பல்லும் பல் ஈறும் வலிமையுடன் இருக்கும் என்பது பொருள்.

புதிர் விளையாட்டு



தாய் மண்ணைத் தாண்டியும் தமிழ் வளர்ப்பில்: வட்டாரத் தமிழ் ஆர்வலர்கள் அங்கீகரிப்பு

திருமதி புஷ்பராணி வில்லியம்ஸ் அவர்களுடனான நேர்காணல்

வடிவமைப்பு மற்றும் தொகுப்பு: செல்வி ஆராதனா அருண் மற்றும் முனைவர் பாலா குப்புசாமி

அனைவருக்கும் வணக்கம்.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்!

என்ற முண்டாசுக் கவியின் கூற்றுக்கு ஏற்ப நம் வட்டாரத்தில் தமிழ்த் தொண்டில் ஈடுபட்டிருக்கும் தமிழ் ஆர்வலர்களை அங்கீகரிக்கும் நிகழ்வு கடந்த 2024 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து அரங்கேறி வருகிறது. இதன் தொடர்ச்சியாய் இவ்விதழில் சிறந்த தமிழ் ஆர்வலரும், மேனாள் வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை துணைத் தலைவர் திருமதி புஷ்பராணி வில்லியம்ஸ் அவர்களை நம் தென்றல் முல்லைக் குழு சந்தித்து உரையாடியது.

செல்வி ஆராதனா அருண்

கேள்வி 1: வணக்கம். தங்களின் இளமைப் பருவத்தைப் பற்றி கூறுங்கள்.

வணக்கம். என் இளமைப் பருவம் மிகவும் மகிழ்ச்சியானது. நான் இலங்கையில் உள்ள யாழ்ப்பாணம் அருகே இளவாலை என்ற ஊரில் பிறந்தேன். என் அம்மா எனக்கு இரவு உணவு ஊட்டும் போது பல தமிழ் புராணக் கதைகள், தமிழ் இலக்கியக் கதைகள், மற்றும் பிற மொழிக் கதைகள் கூறினார். அது இயற்கையுடன் இணைந்த வாழ்வு, வீட்டைச் சுற்றி அழகிய தோட்டம், பழ மரங்கள், மற்றும் பூவரசு மரத்திலான வேலி இருந்தது. இயற்கையின் மீது ஒரு அளவில்லாத ஆர்வம் வந்ததற்கு என் அம்மா தான் முதல் காரணம். அவர் எனக்கு வானவில், தரை தொடும் தாரகை விண்மீன், வண்ணத்துப் பூச்சி காட்டி எங்களை வளர்த்தார். "இளவாலை கன்னியர் மட வித்யாலயா" பள்ளியில் தமிழ் மொழி வாயிலாக பன்னிரண்டாம் வகுப்பு வரை படித்தேன். இவ்வாறு என் இளமைப் பருவம் மிக இனிமையாக இருந்தது.

கேள்வி 2: தமிழுக்காக தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும் ஒரு தூண்டுதல் எப்படி, எங்கிருந்து ஏற்பட்டது?

நான் எட்டாம் வகுப்பு படிக்கும் போது எங்கள் பள்ளிக்கு தனி நாயகம் அவர்கள் சிறப்பு விருந்தினராக வந்திருந்தார். அவர் தான் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தி வந்தார். அவர் "சிந்து சமவெளி நாகரிகம், அது எங்கள் பாரம்பரியம்" என்று கூறியபோது மகிழ்ச்சியாக இருந்தது. அப்போது இலங்கையில் இனப் படுகொலை நடந்து கொண்டிருந்ததால், எங்கள் மொழிக்காக நாங்கள் செயல்பட வேண்டும் என்று ஆர்வம் வந்தது.

கேள்வி 3: மிச்சிகன் தமிழ்ச்சங்கம் முதல், அமெரிக்க தமிழ்ச்சங்கப் பேரவை வரை கடந்து வந்துள்ளீர்கள். இதில் உங்கள் மனதுக்கு நிறைவாக நீங்கள் உணர்ந்த தருணங்கள் யாவை?

நான் என் இருபத்து ஒன்றாம் வயதில் அமெரிக்காவிற்கு வந்தேன். மிச்சிகன் தமிழ்ச் சங்கத்துடன் என்னை இணைத்துக்கொண்டு அவர்களுடன் செயல்பட்டு வந்தேன். 1981-ம் ஆண்டு உலகத் தமிழ் மாநாடு

நடந்தபோது கவிஞர் கண்ணதாசன் அவர்கள் சிறப்பு விருந்தினராக வந்திருந்தார். அவர் உணவு அருந்தும் போது அவருடன் பேசியது, “மயக்கமா? தயக்கமா?” - என்ற அழகிய தத்துவப் பாடலை எழுதியதற்கு நன்றி கூறியது என்று பல மறக்க முடியாத தருணங்கள் உண்டு.

முனைவர் பாலா குப்புசாமி

கேள்வி 4: உலகத் தமிழ் விழிப்புணர்வுக் குழு மூலமாக பல பெரிய தலைவர்களை சந்தித்துள்ளீர்கள். அதில் குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்வைக் கூறுங்கள்.

உலகத் தமிழ் விழிப்புணர்வு நேரம் என்பது 2009 ஆண்டு நடைபெற்ற தமிழ் இனப்படுகொலைக்குப் பிறகு, ஆண்டுக்கு ஒரு மணி நேரம் நடக்கும். அப்போது நாங்கள் தமிழுக்காக, தமிழரின் உரிமைக்காக குரல் எழுப்பும் நேரம் அது. வாசிங்டன் தமிழ்ச்சங்கம் இணைந்து நடத்திய பேரவையின் வெள்ளி விழா நிகழ்வுக்காக திரு. நல்லக்கண்ணு ஐயா, மலேசியா பினாய் மாநிலத்தின் உதவி முதல்வர் திரு. இராமசாமி வந்திருந்தார். 2017-ல் கயானா மாநிலத்தின் பிரதம மந்திரி வந்திருந்தார். 2019- உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடந்த போது மொரிஷியஸ் நாட்டு அதிபர் திரு. பரமசிவம் வையாபுரி அவர்கள் வந்த போது நான் பொறுப்பாக இருந்து *Protocol Officer* - ஆக செயல்பட்டேன். தென் ஆப்பிரிக்காவில் இருந்து, ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் திரு. நவநீதம் பிள்ளை அவர்கள் வந்திருந்த போது இலங்கையில் நடந்த படுகொலை, மனித உரிமை மற்றும் பொறுப்புக் கூறல் பற்றித் தெளிவாகப் பேசினார். இந்த பதினைந்து ஆண்டுகளில் அதை நினைவு கூறுகிறேன்.

கேள்வி 5: மனித உரிமைப் போராட்டத்துடன் உங்களை இணைத்துக் கொண்டுள்ளீர்கள். அதில் கிடைத்த ஏதேனும் ஒரு வெற்றியை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்!

நாங்கள் படிக்கும் போது கல்லூரியில்/பல்கலைக் கழகத்தில் சேர்வதற்கு தமிழராய் இருந்தால், அதிக புள்ளிகள் எடுக்க வேண்டும் என்று தரப்படுத்துதல் இருந்தது. நான் அன்று முதலே என்னை மனித உரிமை/ சமூகப் போராளியாக மாற்றிக்கொண்டேன். ஓர் எடுத்துக்காட்டு கூறவேண்டுமென்றால், போர்க்குற்றங்கள், மற்றும் தமிழர்களுக்கு எதிராக ஏற்பட்ட அநீதியைத் தட்டிக் கேட்பதற்காக, ஐக்கிய நாடுகள் பேரவையின் ஒரு செயல்பாட்டுப் பிரிவு, மனித படுகொலை தொடர்பான தரவுகளைச் சேகரித்து, பாதுகாத்து, அதை நீதி பொறுப்புக் கூறலுக்குப் பயன்படும் வகையில் நடத்திக்கொண்டு வருகிறார்கள். அதை நான் இந்த நேரத்தில் ஒரு வெற்றியாகக் கருதுகிறேன்.

கேள்வி 6: தமிழ்க் கலைகள், மற்றும் பாரம்பரியம் ஆகியவற்றை கட்டிக் காக்க தாங்கள் மேற்கொண்டு வரும் முயற்சிகள் என்ன?

கும்மி, கோலாட்டம், ஆடல் கலை, பாடல் கலை போன்றவை நம்முடன் கூடப்பிறந்தவை என்று நினைக்கிறேன். ஆனால் அதன் பெருமையை நான் உணர்ந்தது பறைக் கலையால் தான். அனைத்து போர்க் கருவிகளுக்கும் தாய்க்கருவி பறை.. நான் முதன் முதலில் பறையை 2003-ம் ஆண்டு பேரவை விழாவில் பார்த்தேன். 2011-ம் ஆண்டு “சக்தி கலைக்குழு” தென் கரோலைனாவிற்கு வந்து அங்குள்ள பெண்களுடன் சேர்ந்து பறை இசைத்தார்கள். அப்போதுமுதல் எனக்கும் பறை இசைக்கும் ஆர்வம் வந்தது. பிறகு நான் பறை கற்று, சொந்தமாக பறை இசைக் கருவிகள் வாங்கி, பல தமிழ்ச்சங்கங்களுக்குப் பயிற்சிகள் அளித்தும் வருகிறேன்.

கேள்வி 7: என்னைப் போன்ற சிறுவர்கள், தமிழ் அடையாளத்துடன் தமிழுடன் சேர்ந்து பயணிக்க உங்களின் அறிவுரைகள் யாவை?

நீங்கள் மிகவும் கொடுத்து வைத்தவர்கள். முன்பெல்லாம் வீட்டில் தமிழ் சொல்லிக் கொடுத்தோம். தற்போது உங்களுக்கு பெரிய பள்ளிகள், ஹார்வர்டு தமிழ் இருக்கை போன்ற வசதிகள் உள்ளன. நீங்கள் தமிழை உங்களோடு மட்டும் வைத்துக் கொள்ளாமல், தமிழ் பேசாதவர்களிடமும் எடுத்துச் செல்ல வேண்டும். உங்களின் தமிழ்ப் பள்ளிக்கூட விழாவிற்கு உங்களின் முழுநேரப் பள்ளி ஆசிரியர்கள், சக மாணவர்கள் ஆகியவர்களை அழையுங்கள். உங்கள் நகரங்களில் பல நிகழ்வுகள் நடக்கும் போது, உங்களுக்குத் தெரிந்த கலைகளை வெளிப்படுத்துங்கள். நம் தமிழ் மொழியை பலருக்கும் தெரியப்படுத்துங்கள். நான் தற்போது ஸ்பேனிஷ், ப்ரெஞ்ச் மொழிகள் கற்று வருகிறேன், அவர்களிடம் நம் தமிழ் மொழியின் பெருமையைக் கூறி வருகிறேன். இளைஞர்களைச் சங்கங்களில் சேர்த்து ஒருவருக்கொருவர் துணையாகத் தமிழை வளருங்கள், தமிழை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லுங்கள். என் பிள்ளைகளுக்கு இருந்த வாய்ப்பை விட உங்களுக்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.

◆

சமீப சாதனை நிகழ்வு!

என் மனதைத் தொட்ட சமீப நிகழ்வு

தொகுப்பு: செல்வன் விநாயக் பாபு கணேஷ்

இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீர் பள்ளத்தாக்கின் ஒரு பகுதி பஹல்கம் என்ற சுற்றுலாத் தளம். பாதுகாப்பு மிகுந்த பகுதியாக அறியப்பட்ட அந்த இன்பச் சுற்றுலாத் தளம் ஏப்ரல் 22, 2025 அன்று தீவிரவாதிகள் தாக்குதலினால் நிலைகுலைந்து போனது. மதத்தின் பெயரால் நடைபெற்ற இந்தத் தாக்குதலில் 26 ஆண்களை அவர்களது மனைவிகளின் கண்முன்னே சுட்டுக் கொன்றனர் தீவிரவாதிகள்.

இந்தத் துயர நிகழ்வு இந்தியா முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. தீவிரவாதிகளுக்குச் சரியான பதிலடி கொடுக்க வேண்டும் என்ற ஒருமித்த கருத்து, சாதி மத வேறுபாடு இன்றி, ஒவ்வொரு இந்தியரிடமும் ஏற்பட்டது. பாரதப் பிரதமர் தலைமையில், இந்திய இராணுவ உயர் அதிகாரிகள், அமைச்சரவை உறுப்பினர்கள் மற்றும் அனைத்துக் கட்சித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டு, இந்திய இராணுவத்தின் எதிர் நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவு வழங்க முடிவெடுக்கப்பட்டது.

ஆண்களைக் குறிவைத்து, அவர்களது மனைவிகளின் கண்முன்னே அவர்களைக் கொன்றதை நினைவில் வைத்து 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் இந்திய இராணுவம் மே 7ஆம் தேதி அன்று தீவிரவாதிகள் பயிற்சி முகாம்கள் மீதும் தீவிரவாதிகளின் தலைவர்களின் பதுங்கு இடங்களின் மீதும் ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டது. ஒன்பது இடங்களில் மேற்கொண்ட இந்தத் தாக்குதலில் தீவிரவாதிகள் பலர் கொல்லப்பட்டனர். தீவிரவாதிகளுக்கு ஆதரவாகச் செயல்பட்ட இராணுவ நிலைகள், இராணுவ உபகரணங்கள் பெருமளவில் சேதப்படுத்தப்பட்டது.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் இரண்டு நாடுகளும் அணு ஆயுதங்களை வைத்து இருப்பதால், இந்த இரு நாடுகளின் தாக்குதல் அணு ஆயுதப் போராக உருவாக்கிடும் என்ற அச்சம் உலக நாடுகளில் ஏற்படத்துவங்கியது. அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகள், இந்தியா மற்றும் பாகிஸ்தான் அரசு தங்களுக்குள் அமைதிப் பேச்சுவார்த்தை ஏற்படுத்தி இந்தப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவர அறிவுறுத்தியது. நான்கு நாட்கள் தாக்குதலுக்குப் பின்னர் இரண்டு நாடுகளும் போர்நிறுத்தத் தீர்மானம் செய்து கொண்டது.

தமிழோடு விளையாடு!

செல்வி இலக்கியா பாலமுருகன்

I. “ம்” என்ற எழுத்தில் முடியும் நான்கெழுத்து வார்த்தைகளைக் கண்டறிக.

சொல் விளையாட்டு!

1. -------------ம்
2. -------------ம்
3. -------------ம்
4. -------------ம்
5. -------------ம்
6. -------------ம்
7. -------------ம்
8. -------------ம்
9. -------------ம்
10. -------------ம்

II. உயிர்மெய்க்குறிலில் தொடங்கி “லை” யில் முடியும் இரண்டெழுத்துச் சொற்களைக் கண்டுபிடி.

1. ------------- லை
2. ------------- லை
3. ------------- லை
4. ------------- லை
5. ------------- லை

விடைகள் 42 ம் பக்கம் பார்க்க...

இருப்பினும் சிந்து நதி ஒப்பந்தத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக இந்திய அரசு அறிவித்து, பாகிஸ்தான் நாட்டிற்கு செல்லும் நதி நீரை தடுத்துவிட்டது. இது இந்திய அரசின் இராஜதந்திரமாகப் பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக பாகிஸ்தான் நாட்டில் விவசாயம் பாதிக்கப்பட்டு உணவுப் பற்றாக்குறை ஏற்படும் சூழல் உள்ளது.

ஒரு அரசின் தவறால் அந்த நாட்டு மக்கள் பாதிப்படைவதை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. பதட்டமான சூழலைத் தணிக்கும் முயற்சியில் இரு நாடுகளும் ஈடுபடவேண்டும். தண்ணீர் மூன்றாம் உலகப் போருக்குக் காரணமாக அமையும் என்ற கணிப்பு உள்ளது. தற்போது நடைபெறும் செயல்கள் அந்தத் திசையை நோக்கிச் செல்வது போன்று உள்ளது.

நீர், நிலம், ஆகாயம் மற்றும் காற்று ஆகிய இயற்கை படைப்பிற்கு எல்லைகள் கிடையாது. மனித சமூகம் தனது பாதுகாப்பிற்காக எல்லைகளை உருவாக்கிக் கொண்டாலும், அதை ஒரு ஆயுதமாக தங்களுக்குள் பயன்படுத்திக் கொள்ள முயல்வது தமக்குத் தாமே முடிவுரை எழுதிக் கொள்வதாகும். செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சி மனிதனின் இயற்கை அறிவை மழுங்கடித்துக் கொண்டுள்ளது. ◆

நம்பிக்கையின் விதை

குறளோடு ஒரு கதை

செல்வி தியா
கமலபாரதி

ஒரு ஊரில் ஒரு விவசாயி இருந்தான். அவன் தன்னோட நிலத்தில் நெல், நிலக்கடலை போன்ற பயிர்களை வளர்ப்பான். ஆனால் அந்த ஆண்டு மழை குறைவாக இருந்ததால் கொஞ்சம் வறட்சி வந்தது.

இந்த மாதிரி நேரத்திலே நெல் பயிரிட முடியாது; ஏனெனில் அது வளரணும்னா அதிகமா நீர் வேண்டும். அதற்குப் பதிலாக குறைவான நீரில் வளரக்கூடிய நிலக்கடலை மட்டும் இந்த ஆண்டு பயிரிடலாம் என்று அந்த விவசாயி முடிவு செய்தான்.

மாடுகளைப் பூட்டி, விவசாயி நிலத்தில் இறங்கினார். ஏர் வண்டியுடன் ஏர் உழுது, கீழிருந்த மண்ணை மேலுள்ள மண்ணுடன் கலந்து, நிலத்தை செழுமையாக்கினார். அந்த நிலத்தில் சில பாறைகள் இருந்தாலும், அவற்றைத் தவிர்க்காமல் சுற்றி வந்து நன்றாக ஏர் உழுதார்.

ஏர் உழுது முடிச்சதுக்கு அப்புறம் விதைகள் தூவ வேண்டிய நேரம் வந்தது. விவசாயி முன்னால் ஏர் ஓட்டிக்கிட்டு போனபோது, அவனோட மனைவி பின்னால் நிலக்கடலை விதைகளை தூவிக் கொண்டு வந்தாள். அப்போது, இரண்டு விதைகள் தவறி ஓடி, ஒரு பாறையின் இடுக்கில் விழுந்துவிட்டன.

நிலத்தில் விழுந்த நிலக்கடலை விதைகள் எல்லாம் சத்து மிகுந்த மண்ணில் விழுந்ததால் நன்றாக முளைக்கத் தொடங்கின. கிணற்றிலிருந்து வாய்க்கால் வழியாக வந்த தண்ணீர் அவற்றுக்கு கிடைத்தது. ஆனால் பாறையின் இடுக்கில் விழுந்த விதைகள், மண் குறைவாக இருந்ததால் சத்து இல்லாமல் வாடின. அவற்றில் ஒன்று மனம் தளர்ந்தது, “நம்மால் வளர முடியாது... நம்ம வளர சரியான இடம் இதுவல்ல” என்று நம்பிக்கை இல்லாமல் கிடந்தது. நம்பிக்கையற்ற விதை பாறையின் மேலேயே படுத்திருந்தது. அடுத்த நாள் ஒரு பறவை வந்து அதனைத் தூக்கிச் சென்று உணவாக சாப்பிட்டுவிட்டது.

மற்றொரு விதையோ, “இந்தப் பாறைக்கு நடுவே சிறிதளவு மண்ணிருக்கிறதே! நம்மால் முடியும்” என்ற நம்பிக்கையுடன், அந்தக் கல்லின் இடுக்கில் இருந்த சிறிய மண்ணுக்குள் ஒளிந்து கொண்டது. அன்று மாலை நல்ல மழை பெய்தது. காற்றும் நீரும் சேர்ந்து நிலத்தில் இருந்த மண்ணை பாறையின் இடுக்குக்குள் அடித்துச் சேர்த்தன. மேலும், பாறையின் மேலிருந்த சிறிய பள்ளத்திலும் மழைநீர் தேங்கி இருந்தது. அந்த நீர் பாறையின் சத்துக்களையும் சேர்த்துக் கொண்டு வந்ததால், அந்த இடுக்கில் சத்தான நீர், சத்து மிகுந்த மண் ஆகியவை உருவாகின.

அதனால், மண்ணுக்குள் பதுங்கி நம்பிக்கையுடன் காத்திருந்த அந்த விதை மெதுவாக முளைத்தது. விவசாயியின் மனைவி, நிலத்தைப் பார்க்க வரும்போது பாறையின் நடுவிலே ஒரு சிறிய நிலக் கடலைச் செடி வளர்வதைக் கவனித்தாள்.

அது தான் அவள் தவறுதலாகத் தூவிய விதை என்பதை உணர்ந்து, அந்தச் செடியை ஆவலுடன் பாதுகாத்து, நிலத்தில் நகர்த்தி நட்டாள். நம்பிக்கை கொண்ட அந்தச் செடி சிறப்பாக வளர்ந்து, நிறைய நிலக்கடலைகளை உருவாக்கியது. அது பாறையின் நடுவே மண்ணுக்குள் சென்று ஒளிந்தபோதும், எதிர்காலத்தில் நன்மை நடக்கப்போவதை நம்பியிருந்தது.

அந்தச் சிறு விதைக்குத் தெரியாமல், மழையும், நீரும், மண்ணும் கிடைத்தன. அதற்குத் தெரிந்தது ஒன்றே ஒன்று - நம்பிக்கை. எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று தெரியாது.

அதனால் “நம்மால் முடியுமா?” என்ற சந்தேகத்தை விட “நிச்சயமாக நல்லதொரு நாளும் வரும்” என்ற நம்பிக்கையே நம்மை வாழ வைக்கும்.

இதையே திருவள்ளுவர் அழகாகச் சொல்கிறார்:

“அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்”

- திருக்குறள் 611 அதிகாரம் ஆள்வினையுடைமை

நம்மால் முடியுமா என்று மனத்தளர்ச்சி அடையாமல், முடியும் என்ற நம்பிக்கையுடன் முயற்சி செய்தால் அதுவே பெரிய வலிமையாக அமையும். ◆

Zillion Technologies

Thought beyond the DOT

CMMI Level 3 & ISO 9001:2008 Certified

GLOBAL EXPERIENCE IN TECHNOLOGY SERVICES AND CONSULTING...

helping our customers reach beyond what they think is possible.

Zillion Technologies' innovative products bridge the gap between business and technology:

core expertise

- **IT Modernization**
- **Digital Transformation**
- **Enterprise Mobility**
- **Cloud Solutions**
- **Cyber Security**
- **AI / ML / DL // Analytics**
- **Testing / QA**
- **Healthcare Management**
- **Project Management**
- **IT Outsourcing**
- **Software Architecture**
- **System Engineering**



Call 703.579.6891

or visit us at zilliontechnologies.com

20745 Williamsport Place | Ashburn, VA 20147
Email: anthony@zilliontechnologies.com

குழந்தைகளின் ஓவியங்கள்

தக்ஷா கணேஷ்

மோஷிகா இராஜேஷ்குமார்

இனியா பால்



தஷ்விண்ட் இராஜேஷ்

வாசுதேவ் ஆனந்தகுமார்

ஆர்யன் சந்தோஷ்

வியன் மகிழன் ராம்குமாரன்

இனியாழ் ஆனந்தகுமார்

கல்கின் இராம்குமாரன்

கவின் விஸ்வசாரதி

தன்யா திருமால்



திஷ்யலேகா இராஜேஷ் கண்ணா

நிக்ஷித் கணேசமூர்த்தி

மனிஷ்

யாஷிகா கண்ணன்

ஹாசினி விஸ்வசாரதி

ரமீன் எஹசான்



இவான் பிரவின்

இயற்கை கற்றுக் கொடுக்கும் பாடங்கள்

இயற்கை தன்னைத்தானே புத்துயிர்த்துக் கொள்ளும் ஒரு ஆச்சரியத்தின் உச்சம். இயற்கை நமக்கு இறைவன் கொடுத்த வரம். இயற்கைதான் நமக்கு மிகப் பெரிய பள்ளிக்கூடம். தினம் தினம் நமக்கு நடத்துகிறது பாடம். கட்டணம் பெறாத ஆசிரியராக இருக்கிறது. இயற்கை கற்றுக் கொடுக்கும் பாடங்களைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

செல்வி கீர்த்தனா கணேஷ்

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற் காடும் உடைய தரண்"

தெளிந்த நீரும், நிலமும், மலைகளும், அடர்ந்த காடுகளும், இயற்கையின் அரண்கள் என்று திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கூறியுள்ளார். இதன்மூலம் பழந்தமிழர்களின் இயற்கை குறித்த பார்வையினை அறியலாம்.

மலைகளும், மரங்களும், ஆறுகளும், கடல்களும், விலங்குகளும், பறவைகளும், நமக்கு தினம் தினம் பாடங்களைக் கற்றுத் தருகின்றன. அதாவது மரங்கள் நமக்கு இலவசமாக கனிகள், காய்கள், மற்றும் நிழலைத் தருகின்றன. அதுபோல், ஆறுகளும் மற்ற நீர் நிலைகளும் நமக்கு தாகம் தணிக்க நீரை இலவசமாகத் தருகின்றன. எறும்பு போன்ற சிறு சிறு உயிரினங்கள் கூட நமக்கு கடின உழைப்பையும் சுறுசுறுப்பையும் கற்றுத் தருகின்றன. பாடம் கற்றுக் கொடுக்கும் ஆசானை அழிவு வராமல் காப்பது நமது கடமையாகும்.

காலம் மாறி வருகின்றது. செயற்கையான பல பொருட்கள் நம்மைச் சுற்றி வந்துவிட்டன. அவற்றுடன் வாழவும், பயன்படுத்தவும் ஆரம்பித்துவிட்டோம். இருப்பினும், இயற்கைக்கு ஈடாக எந்தப் பொருளும் வர இயலாது. துயரமான செய்தி என்னவென்றால் நம்முள் பலர் இயற்கையை இரசிப்பதைவிட அதை அழித்து வருகின்றனர். காட்டை அழிப்பது, ஆறுகளிலும் மற்ற நீர்நிலைகளிலும் அசுத்தங்களைப் போடுவது போன்ற பல செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். உண்மையில் இது போன்ற செயல்கள் எதிர்கால சந்ததியினரை பெரும் பிரச்சனைகளுக்கு உள்ளாக்க நேரிடும்.

பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு இயற்கையை பாதுகாக்கும் வழிகளை கற்றுத்தர வேண்டும். அறிவியல் அறிஞர்கள் இயற்கையை பாதிக்காத கண்டுபிடிப்புகளும், ஆராய்ச்சிகளும் செய்ய வேண்டும். நெகிழி பயன்பாட்டை குறைத்திட வேண்டும். நாம் அனைவரும் இயற்கையை பாதுகாக்க வேண்டும். இயற்கை கொடுத்த கொடையை அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்ல வேண்டும். அனைவரும் முடிந்த வரை இயற்கையை இரசிப்போம். இயற்கையைப் பாதுகாப்போம். ◆

CHENNAI EXPRESS
RESTAURANT & CATERING
www.chennaiexpressva.com

என் பார்வையில் மகாகவி பாரதியார்

செல்வி சுப்ரியா கணேஷ், பிரடெரிக் தமிழ்ப்பள்ளி, மேரிலாந்து.

முன்னுரை:

சுப்ரமணிய பாரதியார் ஒரு தமிழ்க் கவிஞர். இவர் ஒரு கவிஞர் மட்டும் அல்ல. இவர் ஒரு எழுத்தாளர், பத்திரிகை ஆசிரியர், சமூக சீர்திருத்த வாதி. தம் தாய் மொழியாம் தமிழ் மொழி மீது அளவு கடந்த பற்று கொண்டவர். தமிழ்த் தாய் பெற்றெடுத்த பெருங்கவிஞரான மகாகவி பாரதியாரை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

பிறப்பு:

பாரதியார் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரத்தில் சின்னசாமி ஐயருக்கும் இலட்சுமி அம்மாளுக்கும் டிசம்பர் 11, 1882 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தார், இவரின் இயற்பெயர் சுப்பிரமணியன் என்றாலும் சுப்பையா என்று அழைக்கப் பட்டார்.

இளமைப் பருவம்:

சிறு வயதிலேயே பாரதியாருக்கு தமிழ்மொழி மீது சிறந்த பற்றும் புலமையும் இருந்தது. இவரின் 11 ஆவது வயதில், இவருடைய கவிப்புலமையைப் பாராட்டிய எட்டயபுர மன்னர் இவருக்கு பாரதி என்ற பட்டத்தை வழங்கினார். அன்று முதல் இவர் சுப்பிரமணிய பாரதியார் என அழைக்கப் பெற்றார்.

தன் 14 வயதில் செல்லம்மாவை திருமணம் செய்து கொண்டார்.

பாரதியாரின் இலக்கியப் பணி:

மீசைக் கவிஞன் என்றும் முண்டாசுக் கவிஞன் என்றும் தமிழ் இலக்கிய உலகம் போற்றும் பாரதியார் தாய்மொழியாம் தமிழ் மொழியின் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர். இவர் வங்காளம், சமஸ்கிருதம், ஹிந்தி, ஆங்கிலம் போன்ற பிறமொழிகளிலும் புலமை பெற்று விளங்கினார். இவர் “யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்” என்று போற்றிப் பாடியுள்ளார். இவர் கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், புதிய ஆத்திச்சூடி போன்ற புகழ்பெற்ற காவியங்களை எழுதியுள்ளார்.

சமுதாயத் தொண்டு:

சாதிகள் இல்லையடி பாப்பா என்று கூறிய பாரதியார் தீண்டாமையை அறவே வெறுத்தவர். பெண்ணடிமை, சமூக ஏற்றத்தாழ்வுகள் போன்றவை விலக வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தவர். கனல் பறக்கும் கவிதைகளாலே சுதந்திர வேட்கையை ஊட்டியவர்.

முடிவுரை:

பாரதியார் தன் தேசத்தையும் தமிழையும் உயிருக்கு இணையாக நேசித்தவர். அவர் 1921ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ஆம் தேதி தனது 39-வது வயதில் இவ்வுலக வாழ்வில் இருந்து விடுதலை பெற்றார். மகாகவி மறைந்தாலும் அவரின் புகழும் கவிதைகளும் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. அவர் கனவு கண்ட இந்தியாவை உருவாக்குவது நமது கடமையாகும்.

◆

All asian Indian languages
This offer is valid until March
Session 1 : June 9th – 27th 2025
(3 week)
Session 2 : Jun 30th – July 18th, 2025
(3 week)
Session 3 : July 21th – Aug 8th, 2025
(3 week)
(M- F 9:00 AM - 3:00 PM)
Free Parai & Silambam
Pick and drop available
Covering ALDIE, SOUTH RIDING AND ASHBURN, HERNDON, RESTON, FAIRFAX
ஐபாட்டி
iPaatti
Summer Camp
Immersive cultural camp
Silambam, Parai, Folk Dance & Folk Song and more...
SAVE BIG
$1600
One Session
$1199
Two or More Session
$1099
Per week
$449
Scan the QR code to Register
Ipaatti.us
India International School Inc,
4433 Brookfield Corporate Dr,
Chantilly, VA 20151
(703)-966-1633
(703) - 901 -7904

பிரடெரிக் தமிழ்ப்பள்ளி கலை மற்றும் இலக்கியப் போட்டிகள் 2025

திருமதி சுஹாசினி ஜெகநாதன்

அனைவருக்கும் வணக்கம். பிரடெரிக் தமிழ்ப்பள்ளி கலை மற்றும் இலக்கியப் போட்டிகள் கடந்த ஏப்ரல் மாதம் 26 ஆம் தேதி அர்பானா நடுநிலைப் பள்ளியில் நடைபெற்றது. குழந்தைகளின் கலை ஆற்றல்களை வெளிப்படுத்தும் விதமாகவும், தமிழ் மொழித் திறனை வளர்க்கும் விதமாகவும் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. மழலை நிலையில் பயிலும் குழந்தைகள் முதல் 10 ஆம் நிலையில் பயிலும் மாணவர்கள் வரை, அனைவரும் பங்கு கொள்ளும் வகையில் போட்டிகள் பல பிரிவுகளாக சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தன. போட்டிகள் தொடங்கும் முன், மாணவச் செல்வங்கள் அழகாக தமிழ்த் தாய் வாழ்த்து பாடி தமிழ் அன்னைக்கு வணக்கம் செலுத்தினர்.

கண்களுக்கு விருந்தாகவும், காண்பவர்கள் மனதைக் கவரும் விதமாகவும் பிரடெரிக் தமிழ்ப்பள்ளி மாணவர்களின் வண்ணமிகு ஓவியங்கள் அற்புதமாக இருந்தன. மூன்று வயது குழந்தைகள் முதல் பதினாறு வயது மாணவர்கள் வரை விதிமுறைகளுக்கு உட்பட்டு, கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளை ஒட்டி மிகவும் சிறப்பாக ஓவியங்களை வரைந்தனர். கொஞ்சும் இயற்கை, தன் குடும்பம், தாயும் சேயும், நான் விரும்பும் தலைவர், அறிவியல் அற்புதம், குறளோவியம் போன்ற பல தலைப்புகளுக்குத் தக்கவாறு மாணவர்கள் ஓவியங்களைத் தீட்டினர்.

நம்மில் பலருக்கு சிறு வயதில் நம் தாத்தா பாட்டி, அப்பா அம்மா சொன்ன கதைகள் இன்றும் பசுமையாக நினைவிருக்கும். அவற்றிலிருந்து கற்றுக் கொண்ட நன்னெறிகள் நினைவுக்கு வரும். நம் பிரடெரிக் தமிழ்ப் பள்ளியில் படிக்கும் 4 முதல் 7 வயது சுட்டிகள் மழலைத் தமிழில் நீதிக் கதைகள், திருக்குறள் கதைகள் மற்றும் பழமொழிக் கதைகளைக் கூறி தங்கள்

கற்பனைத் திறனை வெளிப்படுத்தினர். கதை சொல்வதும், கேட்பதும் ஒருவரின் தன்னம்பிக்கையையும், மொழித்திறனையும், புரியவைக்கும் ஆற்றலையும் மேம்படுத்தி, பண்பாடு மற்றும் வரலாறு பற்றி தெரிந்து கொள்ளப் பாலமாக அமைகிறது. நடுவர்கள் குழந்தை களின் கதைகளை இரசித்துக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

“இசை கேட்டால் புவி அசைந்தாடும்” என்று கவிஞர் கண்ணதாசன் குறிப்பிட்டது போல, மாணவர்கள் தங்கள் இனிமையான குரலாலும், இசையாலும் அனைவர் மனதையும் கவர்ந்தனர். தமிழ்மொழி மற்றும் சங்க இலக்கியம் சார்ந்த பாடல்கள், நாட்டுப்புறப் பாடல்கள் என்று பலவகையான கடினமான பாடல்களைத் தேர்ந்தெடுத்து, திறனுடன் பாடி அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தனர்.

தமிழ் இலக்கியத்தின் மணிமுடியாகவும் உயர்ந்த ஞானத்தைப் புகட்டும் செம்மொழிகளின் தொகுப்பாகவும் திகழும் திருக்குறள் ஒப்புவிக்கும் போட்டியில் அனைத்து நிலை மாணவர்களும் ஆர்வத்தோடு பங்கேற்றனர். மாணவர்கள் கொடுக்கப்பட்டுள்ள நேரத்திற்குள் பல திருக்குறள்களைப் பொருளுடன் தங்கு தடையின்றி ஒப்பித்தனர். நம் தமிழ்ப்பள்ளி இந்தப் போட்டியை நடத்துவதன் மூலமாக, வள்ளுவத்தை குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்தி அதில் கூறப்பட்டுள்ள கருத்தியல்களையும் மிக உயரிய சிந்தனைகளையும் மாணவர்களின் ஆழ்மனதில் நிலை நிறுத்தப் பெரிதும் வகை செய்கின்றது என்று கூறினால் மிகையாகாது.

மாணவர்களின் தமிழ்ப் பேச்சாற்றலை மேம்படுத்தும் நோக்கில் வார்த்தை விளையாட்டு மற்றும் தமிழில் பேசலாம் வாங்க போன்ற போட்டிகள் நடத்தப்பட்டன. உடனுக்குடன் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு மாணவர்கள் விரைவாக ஆங்கிலம் கலக்காமல் தமிழில் பதில் அளித்தனர். பல தலைப்புகளைப் பற்றித் தமிழில் உரையாடினர். அவர்களின் திறமையைப் பார்த்து, நடுவர்கள் வெகுவாகப் பாராட்டினர்.

பேச்சுக்கலை என்பது முக்கியமான ஒரு திறனாகப் பார்க்கப்படுகிறது. பார் போற்றும் தமிழர் பாரம்பரியம், திருக்குறளின் பெருமைகள், நான் மிகவும் மகிழ்ந்த இன்பச் சுற்றுலா, ஔவையார் கூறும் வாழ்க்கை நெறிகள், எண்மீன் விரல் சார்ந்த திரையின் விளைவுகள், பாரதியும் தமிழும் போன்ற பல தலைப்புகளில் பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டன. மாணவர்களின் மேடைப் பேச்சாற்றலை வளர்க்கவும், அவர்களது தயக்கத்தைப் போக்கி பார்வையாளர்களை எதிர்கொள்ளும் தைரியத்தை வளர்க்கவும் அது வகைசெய்தது. மாணவர்கள் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் இல்லை என நிரூபிக்கும் வகையில் தெளிவான உரத்த குரலில் நல்ல தமிழ் நடையில் உரையாற்றினர்.

மாணவர்களின் எழுத்துத்திறனை வளர்க்க கட்டுரைப் போட்டி உதவுகிறது. இதன் மூலம் மாணவர்களுக்கு எளிதாகத் தமிழில் தொடர்களை அமைப்பதும் இலக்கணத்தை நன்றாக புரிந்து கொள்வதும் எளிதாகிறது. கருத்துகளை பொருத்தமான தலைப்பின் கீழ் வகைப்படுத்தி எழுதுவது அவர்களின் எழுத்தாற்றலை மேம்படுத்துகிறது. தமிழ் எழுத்துத் தேனீ என்ற போட்டியில், மாணவர்களிடம் கேட்கப்படும் தமிழ் வார்த்தைகளை அவர்கள் எழுதினார்கள். அது அவர்கள் தமிழ் மொழியைப் பிழையின்றி எழுத வழிசெய்கிறது.

அனைவரும் ஆவலாக எதிர்பார்த்த விளையாட்டு, வினாடி வினா, இதில் பங்குபெற்ற மாணவர்கள் பல குழுக்களாகப் பிரிக்கப்பட்டு விளையாடினர். கேட்கப் படும் கேள்விகளுக்கு ஒவ்வொரு குழுவும் விரைவாக விடை அளிக்க வேண்டும். வினாக்கள் தமிழ் பாடத்தில் இருந்தும், தமிழ் அறிஞர்களைப் பற்றியும், சமீப உலக

நிகழ்வுகளைப் பற்றியும் கேட்டனர். மாணவர்களிடையே விறுவிறுப்பான போட்டி நிலவியது. இது, பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்து, அவர்களையும் நிகழ்ச்சியில் பங்குகொள்ளச் செய்தது. பெற்றோர்களும் ஆர்வத்தோடு கேள்விகளுக்கு விடையளித்தனர். படம் பார்த்து சொற்களை கண்டுபிடித்தல், பழமொழிகளைக் கண்டு பிடித்தல் போன்ற சுற்றுகள் அனைவருக்கும் மிகவும் பிடித்தவை. அதிகமான வினாக்களுக்கு விடையளித்த மாணவர்க் குழு முதலிடத்தைப் பிடித்தனர்.

குழந்தைகளை உற்சாகப்படுத்தி அவர்களின் அறிவைக் கூர்மைப்படுத்தும் வகையில் சதுரங்கம் மற்றும் பைந்தமிழ் விளையாட்டான ஆடுபுலி ஆட்டம் போன்ற போட்டிகள் நடைபெற்றன. மாணவர்களுக்கிடையே கடுமையான போட்டி நிலவியது. பல சுற்றுகளாக நடந்த போட்டிகளில், இறுதிச் சுற்று வரை வெற்றி பெற்ற மாணவர்களே வெற்றியாளர்களாக வாகை சூடினர்.

உணவு ஏற்பாட்டுக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிற்றுண்டி, நிகழ்ச்சிகளின் நடுவே ஏற்பட்ட பசியின் களைப்பை நீக்கியது. விழாவின் துவக்கம் முதல் இறுதி வரை நிகழ்ச்சிகள் மாணவர்களாலேயே தொகுத்து வழங்கப்பட்டன. இது பிரடெரிக் தமிழ்ப்பள்ளியின் சிறப்பம்சங்களில் ஒன்று.

பிரடெரிக் தமிழ்ப் பள்ளித் தலைவர் முனைவர் பாலா குப்புசாமி, நிர்வாகக்குழு உறுப்பினர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர தன்னார்வலர்கள் பல குழுக்களாக இணைந்து தமிழ்ப்பள்ளியின் கலை மற்றும் இலக்கியப் போட்டி நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்த இன்முகத்தோடு உழைத்தனர். வாசிங்டன் வட்டாரத் தமிழ் ஆர்வலர்கள், வட்டாரத் தமிழ்ப் பள்ளிகளிலிருந்து ஆசிரியர்கள் மற்றும் நிர்வாக உறுப்பினர்களை நடுவர்களாக நியமித்திருந்தனர். அவர்கள் மாணவர்களின் திறமையை ஊக்குவிக்கும் வகையில், பல முன்னேற்றமான கருத்துகளை தெரிவித்து மாணவர்களை வாழ்த்திப் பேசினர்.

நன்றி உரையைத் தொடர்ந்து அனைவரும் இந்திய மற்றும் அமெரிக்க நாட்டுப்பண் பாடி, குறித்த நேரத்தில் நிழச்சியை நிறைவு செய்தனர். அன்று முழுவதும் நடந்த நிகழ்வுகளில் மாணவர்கள் கலந்துகொண்ட உற்சாகத்தைக் காணும்பொழுது, நிச்சயமாக தமிழ் பல தலைமுறைகளைக் கடந்தும் வாழையடி வாழையாக ஓங்கி வளரும் என்பதில் ஒரு ஐயமும் இல்லை.

வையகம் போற்ற வாழ்க தமிழ்! வான் உயர வளர்க தமிழ்!

நன்றி.

நான் பார்த்து வியந்த மனிதர்!!



காலையில் சேவல் கூவும் முன்பே தன் வேலையைத் தொடங்கி விடுவார், கடின உழைப்பாளி!

உறவுகளின் தேவையை உணர்ந்து உடனுக்குடன் பூர்த்தி செய்வார்!

கடவுளே அவர் வரவை எதிர்பார்க்கும் வழக்கமான வாடிக்கையாளர் கோவிலுக்கு!!

அம்மா, மனைவி, மகள், தங்கை என எல்லா உறவுகளையும் என்றும் தன் உயிராக மதிப்பவர்!

எங்களுக்காக எங்களோடு என்றும் பயணிக்கும் நான் பார்த்து வியந்த மனிதர் என் அப்பா!!

திருமதி புவனேஸ்வரி இராஜேஷ்குமார்

CYBERSECURITY
HEALTHCARE IT
CLOUD COMPUTING
BIG DATA

TRANSFORMING ORGANIZATIONS INTO
HIGH-PERFORMANCE BUSINESSES » IS OUR COMMITMENT.

BUSINESSINTEGRA
TOGETHER » IT IS DONE

BUILDING HIGH-PERFORMANCE BUSINESS

PRATHIBA RAMADOSS, PRESIDENT & CEO
SELVA JAYARAMAN, EVP & CTO

6550 Rock Spring Drive
Suite 450
Bethesda, MD 20817
Telephone: 301-474-9600
www.businessintegra.com

Inc. 500
CMMI LEVEL 3
Certified ISO 9001:2008
Information Security Management Certified ISO 27001:2013
Certified Service Management Systems ISO 20000:2011

முதல் தலைமுறையின் இசைக் கனவுகள் – டிஎம்வியில் (DMV) தமிழ் அலை!

DOUBLE TREBLE KIDS LIVE TAMIL MUSICAL CONCERT - APRIL 5, 2025

ஏப்ரல் 5 காலை இமெயில் இன்பாக்ஸில டபிள் ட்ரெபிள் (Double Treble) இசை நிகழ்ச்சிக்கான நினைவூட்டல். இந்தப் பசங்க போன வருடமே ஆச்சரியப்பட வச்சாங்க. செலவு செய்யும் நேரம் நிச்சயமா நல்ல அனுபவமா இருக்கும் என்று போனால், ஆரம்பமே அசத்தல். பங்கு பெற்ற அறுபது பிள்ளைகளை அறிமுகப்படுத்தும் விதமா பொன் மழை பொழியும் பிண்ணனியில் ஸ்லைட் ஷோ. ஒரு பெண் ஊஞ்சல் ஆடிக்கொண்டே வீடியோ அறிமுகம். சினிமா டைட்டில் மாதிரி எப்படியெல்லாம் யோசிக்கிறாங்க ! முதல் நிகழ்வா, கீ போர்ட் உயரம் கூட இல்லாத சின்ன பசங்க பல பாடல்களை கலவையா, கோர்வையா கொடுத்து ஆர்வத்தைத் தூண்டி விட்டாங்க. இவங்களை ஒரு இடத்தில் அமைதியா உட்கார வைப்பதே பெரிய வேலை. இசைக்க வைத்தது, மாபெரும் வேலை. அடுத்து வந்த 18 பாடல்கள், 1960ல் இருந்து இன்று வரை தமிழ் சினிமாவின் ஆகச்சிறந்த இசை அமைப்பாளர்களின் இனிமையான பாடல்கள்.

M.S. விஸ்வநாதன் முதல் இசைஞானி இளையராஜா வரை இசை அமைத்த பாடல்களைப் பாடி, கரோக்கி சமாச்சாரமெல்லாம் இல்லாம, எல்லா இசைக் கருவிகளையும் மேடையில் நேரடியா இசைத்து, பல பாடல்களுக்கு இசை, அதன் அசல் பாடல்களின் இசைக்கு மிக அருகில் வந்தது.

இன்ஸ்டாவில் தொடர்பு கொள்ள:
FollowusonInsta@ DoubleTreble

துவக்கம் முதல் கடைசி பாட்டு வரைக்கும் தளராத, பிசகாத, இரசிக்கத்தக்க டிரம்ஸ் கச்சேரிக்கு அடித்தளம். பல பாடல்களில் அசல் பாட்டுக்கு மிக அருகில் வந்த குழல் இசை. குட்டி யானையோட வளைந்த தும்பிக்கையில் இருந்து வரும் இன்குரல் போன்ற சாக்ஸபோன். உயிர்ப்பா, மாடர்னா…ஸ்டைலா.. அங்கங்கே குரலில் சேட்டைகள்..பாடும்போது தானும் இரசித்து, அந்த இரசிப்பு நமக்கும் தொற்றி, அரங்கை பாட்டோடு ஒன்ற வைக்கும் ஈடுபடும் செயல்திறன் (engaging performance). சில பாடல்களை அவர்களே கேட்டு அரங்கத்தில் இருந்தவர்களை பாட வச்சாங்க. பல பாடல்களைக் கேட்டு, அரங்கத்தில் இருந்தவங்க தானா ஆடினாங்க. தரம் அந்த அளவுக்கு இருந்தது.

இசைக்குழு எவ்வளவுதான் மெனக்கெட்டு இசைத்தாலும், ஒரு மைக் அல்லது ஒலிப்பெட்டி (sound box) இரைச்சல் சத்தம்போட்டா அம்பேல். அப்படி எந்த இடையூறும் இல்லாம மிகச்சிறந்த முறையில் ஒலி அமைப்பு நிர்வாகம் செய்தது வாசிங்டன் தமிழ்ச்சங்கத்தலைவர் செந்தில். அறிவிப்பாளர் ரூபன் ஜகன்னாதன், தமிழும் இசையும் தெரிந்தவர். ஒவ்வொரு பாடலுக்கும் பாடகரை, அதில் நன்றாக இசைத்தவரை வெளிச்சம் போட்டு, தனித்துப் பாராட்டி மெச்சியது சிறப்பு. ஐந்திற்கும் மேற்பட்ட கேமரா மேன்ஸ் பம்பரமா சுத்தினாங்க..வளைச்சு வளைச்சு எடுக்கிறாங்களேனு நினைச்சா, யூ டியூபில் நேரலை செஞ்சிருக்காங்க. அரங்கம் வர இயலாதவர்க்கும், தமிழகத்தில் இருந்தவர்களுக்கும் கண்டு கேட்டு களிக்க அது ஒரு நல்ல வாய்ப்பு. நல்ல யோசனை! அரங்க வாடகை, ஆள், அம்பு, டீ என்று நிறைய செலவாகி இருக்கும். ஆனால் வந்தவங்க கிட்ட ஒரு பைசா கேட்கல. சமத்வா, கல்பாசி மாதிரி புரவலர்கள் ஆதரவு. இருக்கட்டும். பெருகட்டும்.

திருமதி கீர்த்திகா உலகநாதன்

திரு. மோகன்ராஜ் சண்முகம்

அனைத்து பாடல்களுக்கும் இசைக் குறிப்புகள் எடுத்து, வாசித்துப் பார்த்து, மாற்றி, பிறருக்கு சொல்லிக் கொடுத்ததென்று ஒரு 8 பிள்ளைகளை அறிமுகப்படுத்தினாங்க. பெரும் ஆர்வமும், உழைப்பும் ஈடுபாடும் இருந்தால் மட்டுமே சாத்தியமாகும். அமெரிக்காவில் பிறந்து வளர்ந்த 6 முதல் 16 வயது வரை இருந்த 60 பிள்ளைகளைக் கொண்ட டபிள் ட்ரெபிள் (Double Treble) இசைக்குழுவால் டி.எம்.வி (DMV) வட்டத்தில் உள்ள காதுகளுக்கு நல்ல தமிழ்த் திரை இசை கேட்கும் வாய்ப்பு. அடுத்த தலைமுறைக்கு தமிழும் இசையும் கொண்டு போகும் நல்லதொரு முயற்சி.

குழுவாகக் கற்பதற்கும், கற்பிப்பதற்கும் ஒரு அருமையான வாய்ப்பு. கச்சேரியை விட, அந்த கற்கும் நேரங்களில் இந்தக் குழுவினர் மிக மகிழ்ச்சியாக, கொண்டாட்டமாக இருந்திருப்பார்கள். முதல் பயிற்சியில் இருந்து மேடை ஏறும் வரை சில மாதங்கள், ஒரு நூறு பேரை, பதின் வயதினரை, நேர்மறையான ஒரு செயலில் ஈடுபடுத்தி, கொண்டாட்டமாக நிறைவடைய வைத்ததுதான் டபுள் ட்ரெபிள் குழுவின் வெற்றி. எண்ணி, இயக்கி, செயல் வடிவம் கொடுத்த கீர்த்தி, பிரபாகர், ஷீபா பிரேம், இராஜசேகர் மற்றும் ஸ்ரீனிவாஸ் குழுவுக்கு நன்றி.

குழந்தைகள் தின விழாவில் வாசிங்டன் தமிழ்ச்சங்கத்தில் நடைபெற இருக்கும் டபிள் ட்ரெபிள் குழுவின் இசை நிகழ்ச்சியை ஆவலோடு எதிர்நோக்கலாம்.. டபிள் ட்ரெபிள் குழுவின் இசை மேலும் இனிமையாகவும், மேலும் பலரின் காதுகளை குளிர்விக்கவும் வாழ்த்துகள்! ◆

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கத்தின்

சித்திரைத் திருவிழா

புதுவை முருகு

தமிழரின் பெருமை கூறும் சித்திரை மாதத்தில்தான் பசுமை, புதுமை, பெருமிதம் அனைத்தும் ஒருங்கிணை கின்றன. இந்த வருடமும் வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கம் தனது சித்திரைத் திருவிழா *2025*-ஐ விமரிசை யாகக் கொண்டாடியது. *Greenbelt*-இல் உள்ள *Eleanor Roosevelt High School* மையமாக அமைந்த இவ்விழா, தமிழ் மூலமுள்ள ஒற்றுமையையும், கலையையும் ஒளிரச் செய்தது.

வாழை இலை விருந்து!

மாலை நிகழ்ச்சிகளை முன்னிட்டு காலை *11:30* மணிக்குத் தொடங்கிய வாழை இலை விருந்து உண்மையில் ஒரு பாரம்பரிய திருவிழாக் காட்சி. சுவைமிகு தமிழுணவு, அன்பும், வரவேற்பும் கலந்திருந்தது. முக்கிய ஆதரவாளர்களாக *Triveni Supermarket* மற்றும் *Aadya Foods*, நிகழ்வை ஊக்குவிக்கும் வகையில் பங்களித்தனர்.

பவா செல்லதுரை – கதை சொல்லல் ஒரு கலையா அல்லது பேரறமா?

தமிழில் எழுத்தாளராகவும், திரைப்பட நடிகராகவும், சமூக சிந்தனையாளராகவும் உயர்ந்த திரு. பவா செல்லதுரை அவர்கள் நிகழ்வின் முக்கிய கலைவிருந்தினராகப் பங்கேற்றார். "ஒரு மனிதனின் குரல் கதையா அல்லது காலத்தின் சாட்சியா?" என்ற அவரது உரைநடைக் கதைப்பொழிவு, அரங்கத்தில் இருந்த ஒவ்வொருவரையும் நெகிழச் செய்தது. அவர் தன் வாக்கின் வழியே கதை சொல்லும் செயலுக்கு உயிர் கொடுத்தார்.

NATAWO அறிமுகம் – எழுத்தாளர்களுக்கான புதிய பரிமாணம்!

இவ்விழாவில் ஒரு முக்கிய நிகழ்வாக, தமிழ்ச் சமூகத்தில் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட *North America Tamil Writers Organization (NATAWO)*-வின் அறிமுகமும் நடைபெற்றது. திரு. முருகவேலு வைத்தியநாதன், *NATAWO* நிறுவனரும், முன்னோடியுமான இணை நிறுவனர் முனைவர் பாலமுருகன் குப்புசாமி அவர்களுடனும், முனைவர் அரசு செல்லையா அவர்களுடனும் இணைந்து, மேடையில் நின்று, *NATAWO*-வின் நோக்கமும் செயல்பாடுகளும் பற்றிய விழிப்புணர்வு உரையை வழங்கினர்.

இந்த அறிமுகம் எழுத்தாளர் சமூகத்திற்குப் பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியது. பலரும் உறுப்பினராக



கலைகளை, பாரம்பரிய நடனம், நாடகம், தமிழிசை, ஒவியக் கண்காட்சி போன்றவற்றின் மூலம் வெளிப்படுத்திய விதம். பல வாரங்களாக நடைபெற்ற தயாரிப்புகள், பெற்றோர் மற்றும் ஆசான்களின் முயற்சியை பிரதிபலிக்கச் செய்தது.

முடிவில் நினைவுகள் மட்டும் அல்ல – வழிகாட்டும் விழிப்புணர்வும்!

மாலைக்கட்டத்தில் நிகழ்ச்சியின் நிறைவு, பரிசளிப்பு விழா, மற்றும் திருவிழாவைக் குறித்து உரையாற்றிய சங்கத் தலைவர் திரு. செந்தில் அவர்கள், “தமிழ் என்பது சோதனையிலும், மகிழ்ச்சியிலும் ஒன்றிணைக்கும் உணர்வு. இவ்விழா அந்த உணர்வுக்கே உரிய நினைவாகும்,” என்றார். ◆

மேரிலாண்ட் தமிழ்க் கல்விக் கழகத்தின் 19-வது ஆண்டு விழா

தொகுப்பு: திரு. கமலபாரதி பச்சியப்பன்

மேரிலாண்ட் தமிழ்க் கல்விக்கழகத்தின் 19-வது ஆண்டு விழா, சனிக்கிழமை, மே 17, 2025 அன்று ஜெர்மன் டவுன் நகரில் உள்ள கிங்ஸ் வியூ நடுநிலைப் பள்ளியில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

திரு. கமலபாரதி பச்சியப்பன்

மேரிலாண்ட் தமிழ்க் கல்விக்கழகம் அனுபவம் மிக்க நிர்வாகக் குழுவால், தன்னார்வல ஆசிரியர்களின் பங்களிப்புடனும், நாளைய தமிழ்ச் சமூகத்தின் தூண்களான மாணவப் பயிற்சி ஆசிரியர்களின் முயற்சியுடனும் அமெரிக்கத் தலைநகரமான வாசிங்டன் வட்டாரத்தில் தமிழ் மொழியைக் கற்பிக்கும் ஒரு தன்னார்வலத் தொண்டு நிறுவனமாகும்.

இந்த ஆண்டுவிழாவில், பெற்றோர்களின் நல்லாதரவுடன் மாணவ, மாணவியர் உற்சாகமாகப் பங்கேற்றனர். கண்ணுக்குக் குளிர்வூட்டும் வண்ணமிகு நடன நிகழ்ச்சிகள், மொழியின் மெய்ப்பொருளை உணர்த்தும் நயமிகு உரைகள், மற்றும் மீண்டும் மீண்டும் கேட்கத் தோன்றும் தேனிசைத் தமிழ்ப் பாடல்கள் பார்வையாளர்களின் உள்ளத்தையும், அரங்கத்தையும் அலங்கரித்தன. மாணவர்களின் திறமை, ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு, மற்றும் தன்னார்வலக் குழுக்களின் ஒத்துழைப்பு, விழாவை சிறப்பிக்க முக்கிய பங்கு வகித்தன.

திருமதி சரண்யா கிருஷ்ணமூர்த்தி மற்றும் திருமதி ஆனந்தி மனோகரன் சிறப்பாக நிகழ்வுகளை ஒருங்கிணைத்து இருந்தனர். மாலை சிற்றுண்டி மற்றும் இரவு உணவுக்கான ஏற்பாடுகள் சிறப்பாகச் செய்யப்பட்டிருந்தன.

மேரிலாண்ட் தமிழ்ப் பள்ளியில் பயின்ற மாணாக்கர்கள் —

செல்வன் அக்னயா தருண், செல்வி அபிகைல் ஜெரால்டு, செல்வி தியா அருண்குமார், செல்வன் கார்த்திக் செந்தில்குமார், செல்வன் சயீப் எஸ்ஸா, செல்வி ரோஷினி சுரேஷ்குமார், செல்வன் வருண் சிவகுமார், செல்வன் ஹாரித் ஆண்டர்சன் ஹென்றி, செல்வி கீர்த்தி சாக்ரடீஸ் ஆகியோர் 2024-25 கல்வி ஆண்டில் தமிழ் மொழியில், மேரிலாண்ட் மாநில அரசின் இரு மொழி முத்திரை (Seal of Biliteracy) பெற்று பெரும் சாதனை புரிந்துள்ளனர். ஒரே ஆண்டில் பத்து மாணவர்கள் இரு மொழி முத்திரை பெற்றதன் மூலம், மேரிலாண்ட் தமிழ்க் கல்விக் கழகத்திற்கும் வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சமூகத்திற்கும் மிகப்பெரிய பெருமையைத் தேடித் தந்துள்ளனர்.

மேரிலாண்ட் தமிழ்ப் பள்ளியில் பயின்று பட்டம் பெற்ற மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழாவும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்ட்கோமரி மாவட்ட பள்ளிக் கல்வித்துறையின் உலக மொழிகள் மேற்பார்வை யாளர் திருமதி வேண்டேன்ப்ளஸ் ஃப்ரான்கோய்ஸ், மேரிலாண்ட் மாநில கல்வித் துறையின் உலக மொழிகளின் நிபுணர் திருமதி கரோல் வேன் டென்மார்க், மேரிலாண்ட் தமிழ்க் கல்விக் கழக முதல்வர் திரு. வடிவேல் இராமசாமி, மற்றும் துணை முதல்வர் திரு.

கமலபாரதி பச்சியப்பன் ஆகியோர் இரு மொழி முத்திரை பெற்ற மாணவர்களையும், பட்டம் பெற்ற மாணவர்களையும் வாழ்த்தி கௌரவித்தனர்.

வெர்ஜினியா மாகாணத்திலிருந்து வந்து, ஒலி மற்றும் ஒளி ஏற்பாட்டை திரு. செந்தில்குமார் மற்றும் அவரது குழுவினர் மிகச் சிறப்பாகச் செய்திருந்தார்கள். நிகழ்வின் அழகிய தருணங்களை நிழற்படமாகப் பதிவு செய்யும் பணியில் திரு. விஸ்வநாத் மற்றும் திரு. பெரியகருப்பன் அவர்களும் மிகுந்த உற்சாகத்துடன் உதவினார்கள். வாசிங்டன் வட்டாரத்தில் செயல்படும் பிரடெரிக் தமிழ்ப் பள்ளிப் பொறுப்பாளர்களும், பாரதியார் தமிழ்ப் பள்ளிப் பொறுப்பாளர்களும் விழாவிற்கு வருகை தந்து விழாவைச் சிறப்பித்தனர்.

மேரிலாண்ட் தமிழ்க் கல்விக் கழகத்தின் முக்கியத்

தூண்களான ஆசிரியர்களையும், மாணவப் பயிற்சி ஆசிரியர்களையும், தன்னார்வலர்களையும், அவர்களின் தன்னலமற்ற மற்றும் அர்ப்பணிப்புமிக்க சேவையையும் மாண்ட்கோமரி மாவட்டத்தின் பிரதிநிதி திருமதி மார்லின் பாலகோம்பே அவர்கள் பாராட்டினார். மேலும், அமெரிக்கத் தமிழ்க் கல்விக் கழகத்தின் (அ.த.க.) நெடுநாள் ஆசிரியர் விருது பெற்ற ஆசிரியை திருமதி மகாலட்சுமி கணபதி சுப்புராம் அவர்களும் விழாவில் சிறப்பாகக் கௌரவிக்கப்பட்டார்.

இந்த ஆண்டு நடைபெற்ற கலை இலக்கியப் போட்டிகளில் பங்கேற்று, வெற்றி வாகை சூடிய, முத்தமிழ் வித்தகர்களான அனைத்து மாணவ, மாணவியருக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வை இணைச் செயலாளர் திரு. இராமசாமி கந்தசாமி , நிர்வாகக் குழு இயக்குநர் திரு. கார்த்திக் பரசுராமன், திரு.சையது அபுபக்கர் மற்றும் திருமதி சோபா இரமேஷ் ஆகியோர் சிறப்பாக ஒருங்கிணைத்து இருந்தனர்.

மேரிலாண்ட் தமிழ்க் கல்விக் கழகத்தின் உறுப்பினர்கள் பங்கேற்ற பொதுக்குழுக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. பொதுக்குழு கூட்டத்தை செயலாளர் திரு. சங்கர சுப்ரமணியன் பரமேஸ்வரன் துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து 2024-25 ஆம் ஆண்டில் பள்ளியின் செயல்பாடு மற்றும் சாதனைகளைத் துணை முதல்வர் திரு. கமலபாரதி பச்சியப்பன் விளக்கினார். முதல்வர் திரு. வடிவேல் இராமசாமி அவர்கள் மேரிலாண்ட் தமிழ்க் கல்விக்கழகத்தின் வருங்காலத் திட்டங்களைப்பற்றி விரிவாகப் பேசினார். பொருளாளர் திரு. அருண் வெங்கடேஷ் செல்லத்துரை நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்தார்.

எமது பள்ளி உறுப்பினர்களின் ஆரவாரப் பங்கேற்போடும், வழக்கமான உற்சாகத்தோடும் மேரிலாண்ட் தமிழ்க் கல்விக் கழகத்தின் ஆண்டு விழா சிறப்புற நிறைவடைந்தது. ◆



வாசிங்டன் தமிழ்ச்சங்கம் மற்றும் குறள் கூடல் செம்மொழி அறக்கட்டளை நிகழ்வு

அனைவருக்கும் வணக்கம்.

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்

என்ற வள்ளுவரின் திருக்குறளுக்கு ஏற்ப திருக்குறளின் பெருமை நாம் அனை வரும் அறிந்ததே ஆகும். அமெரிக்க வாழ் மக்களான வாசிங்டன் பகுதி மக்கள் திருக்குறளுக்கு மேலும் பெருமை சேர்க்கும் விதமாகத் தமிழ்ச்சங்கம் மற்றும் குறள் கூடல் செம்மொழி அறக்கட்டளை இணைந்து நடத்திய உலக சாதனை முயற்சியின் ஒரு பகுதியாக, திருக்குறளில் ஒவ்வொரு அதிகாரத்திலும் உள்ள மூன்றாவது குறளைப் பதிவு செய்யும் நிகழ்வு இராபர்டோ கிளெமென்ட் இடைநிலைப் பள்ளி, மேரிலாண்டில் மிகச்சிறப்பாக மே 11 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் சுமார் 350 பேர் கலந்து கொண்டனர், அதில் குழந்தைகள் மட்டும் 150 பேர். 4 வயது முதல் 91 வயது வரையிலான பங்கேற்பாளர்கள் திருக்குறளை ஒப்புவித்து நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர். பங்கேற்பாளர் அனைவரும் 60 நொடிக்குள் ஒரு திருக்குறளை அதிகார எண், அதிகாரத்தின் பெயர், குறள் எண், திருக்குறள் மற்றும் அதன் பொருளைச் சொல்லவேண்டும் என்பது நிகழ்ச்சியின் விதிமுறை ஆகும்.

திருமதி அபிநயா மோகன்குமார்

மொத்தம் 10 மாநகரங்களில் இந்த நிகழ்ச்சி நடத்த முடிவு செய்யப்பட்டு மூன்றாவது நகரமாக நமது வாசிங்டன் வட்டாரம் தேர்ந்து எடுக்கப் பட்டதால் மூன்று என்ற வரிசையில் வரும் திருக்குறள் நமக்குத் தரப்பட்டது, அதாவது 3,13,23,33, ... என்று 1133 ஆம் குறளில் நாம் முடிக்க வேண்டும்.

4 வயது சிறியவர் முதல் 90 வயது வரை அனைவரும் ஆர்வமுடன் இதில் கலந்துகொண்டனர். இரண்டு மணியளவில் தொடங்கிய நிகச்சியின் முதல் கட்டமாகப் பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்பட்டது. பின்பு அனைத்து பங்கேற்பாளர்களும் சான்றிதழ்களுடன் குழுப் புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள்.

நிகழச்சிகள் நான்கு கட்டமாகப் பிரிக்கப்பட்டு நான்கு வகுப்பறைகளில்,

தன்னார்வலர்கள் பொறுமையாகக் குழந்தைகளை ஊக்குவித்து காணொளிப்பதிவு செய்து முடித்தனர். குழந்தைகளின் முத்து முத்தான குரலில் திருக்குறளின் விளக்கத்தைக் கேட்பதற்கு இனிமையாக இருந்தது. குழந்தைகள் அறத்துப்பால், பொருட்பால் அதிகாரங்களைத் தேர்வு செய்ய, பெரியவர்கள் இன்பத்துப் பால் அதிகாரத்தைப் பொருளுடன் சொன்ன விதம் மிக அருமையாக இருந்தது. குறள் சொல்லி முடித்தவுடன் அனை வருக்கும் தேநீர் மற்றும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

நிகழ்ச்சி நடத்த முடிவு செய்யப்பட்ட முதல் நாளில் இருந்து திரு. நித்திலச் செல்வன், திரு. பாலாஜி துரைசாமி அவர்கள் இருவரும் சில தன்னார்வலர்களுடன் இணைந்து இந்த உலக சாதனை முயற்சியின் குறள் கூடல் நிகழ்ச்சியைச் சிறப்பாக நடத்தி முடித்தனர். இதுவரை 3 நகரங்களில் நிகழ்வு நடைபெற்றுள்ள நிலையில் மக்கள் அதிக ஆர்வத்துடன் கலந்து கொண்டதனால், எதிர் காலத்தில் இன்னொரு நிகழ்ச்சி நமது வட்டாரத்தில் நடத்தும் திட்டம் பரிசீலிக்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியின் ஆணிவேர் திருமதி மாலா கோபால் அவர்கள் நிகழ்ச்சியைச் சிறப்பிக்க நேரில் வந்தது நமக்குப் பெருமை. நிகழ்ச்சி இனிதே நடக்க முழு ஆதரவு தந்த வாசிங்டன் தமிழ்ச்சங்கத் தலைவர் திரு. செந்தில் அவர்களுக்கு நன்றி. ◆

i-Link SOLUTIONS

Phone: 571.969.2221 Fax: 888.206.3994
Email: info@ilinksolutions.com
www.ilinksolutions.com

ABOUT i-LINK SOLUTIONS

Headquartered in Chantilly, Virginia and incorporated in 2002 as an SBA Minority, Women-Owned Small Business (WOSB), i-Link Solutions is proud to be one of the fastest growing companies in America, as recognized by the Virginia Chamber of Commerce.

ESTABLISHED	CAGE	UEI
2002	63GP3	X7QKLLR8F833

FEDERAL CUSTOMERS

- U.S. Department of Homeland Security
- Federal Aviation Administration
- General Services Administration
- U.S. Department of Health and Human Services
- U.S. Agency for International Development

Chocks Solaiappan
President
Phone: (703) 594-8616
Email: chocks@ilinksolutions.com

Join Team i-Link Solutions!
Career Opportunities
Scan to View Openings

WHAT WE DO

Agile Software Engineering

- Robotic Process Automation
- DevSecOps
- CI/CD Pipeline
- Application Development
- Customer Relationship Mgmt
- Microservices & Containerization
- User-Centered Design

Software Testing

- Software Lifecycle
- Quality Assurance
- Independent Verification and Validation
- Agile Test Automation
- Software Quality Engineering
- Section 508 Testing

Cloud Services

- Cloud Migrations
- Cloud-First Development
- Cloud Optimization
- Hybrid Cloud Solutions
- Architecture Design
- SaaS
- Data Privacy

Cyber Security

- Threat Management
- DDoS Mitigation
- Security Consulting

Data Analytics

- Business Intelligence
- Databases
- Analytics Servers

OUR CONTRACTS

FAA eFAST BPA	GSA Multiple Award Schedule	GSA 8(a) STARS III	HHS BPA	NYS HBITS
693KA22A00064	47QTCA20D0036	47QTCB21D0415	75R60223A00011	23158

ISO 9001:2015 ISO 20000-1:2018 CMMI SVC | ML3 APPRAISED Appraisal # 61394 | Exp. Sep 20, 2025

i-Link Solutions, Inc.
4100 Lafayette Center Dr. Suite 112,
Chantilly, VA 20151

SBA Minority, Woman-Owned Small Business (WOSB)

சமீபத்திய திரைப்படங்கள்: ஒரு சிறப்புப்பார்வை

டூரிஸ்ட் பேமிலி

அன்பு, என்றும் நாடுகளால், மொழியால் இனத்தால் சாதியால் மதத்தால் பிரிந்து கிடக்கும் மனிதர்களை ஒன்று சேர்க்கும். இந்த இருபத்து ஒன்றாம் நூற்றாண்டிலும், அன்பு என்னும் ஆலமரம் எங்கும் விருட்சமாக தனது கிளைகளைப் பரப்பி வளர்ந்து கொண்டேதான் இருக்கிறது. நீங்கள் நேர்மையாய் இருந்தால், அன்பாய் இருந்தால் இந்தச் சமூகம் உங்களை எந்த நேரத்திலும் தாங்கிப் பிடிக்கும். எந்த ஆபத்துகளில் இருந்தும் உங்களை காப்பாற்றும். இந்தச் செய்தியைச் சொல்லி வெளி வந்துள்ள திரைப்படம்தான் புதிய இயக்குநர் அபிஷன் ஜீவிந் இயக்கியுள்ள டூரிஸ்ட் பேமிலி *(Tourist Family)*

திரு. சுரேந்த் ஜேம்ஸ்

இலங்கையில் இருந்து இராமேஸ்வரம் கடல் மார்க்கமாக வந்திறங்குகிறது தர்மதாஸ் (சசிகுமார்), வசந்தி(சிம்ரன்) மற்றும் அவர்களது இரு மகன்களான நிதுசன் (மிதுன்) மற்றும் முள்ளி (கமேலேஷ்) அடங்கிய இலங்கை குடும்பம். அதற்கு அந்தக் குடும்பம் சொல்லும் காரணம், இலங்கையின் பொருளாதார வீழ்ச்சி. அங்கு வாழ வழி இல்லை. அந்தக் குடும்பத்தை வழிமறிக்கும் போலீஸ் பைரவனிடம் (ரமேஷ் திலக்) இருந்து தப்பிப்பது ஒரு சுவாரசிய பகுதி. அந்தக் குடும்பத்தை சென்னைக்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு வீடு பார்த்துக் கொடுத்து வேண்டிய உதவிகளைச் செய்கிறார் வசந்தியின் அண்ணண் பிரகாஷ் (யோகிபாபு). புதிதாய்த் தாங்கள் நுழைந்த கேசவ நகர் காலனி குடும்பங்களின் மதிப்பை கொஞ்சம் கொஞ்சமாக சேமிக்கிறார்கள்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு கிளைக் கதை இருக்கிறது. ஒவ்வொன்றிலும் இந்தக் குடும்பத்தின் பங்கு என்ன என்பதை இனிதே விளக்குகிறது இந்தத் திரைப்படம். இதற்கிடையே இராமேசுவரத்தில் குண்டு வெடிக்க அதற்குக் காரணம் இந்தக் குடும்பம் என்று கருதி ஒரு வட இந்திய காவலதிகாரியின் தலைமையில் காவல் துறை இவர்களைத் துரத்த, இந்தக் குடும்பம் என்னவாகிறது என்பது தான் திரைப்படத்தின் முடிவுக் காட்சி.

படத்தின் பலமே திரைக்கதையின் எளிமைதான். ஒவ்வொரு நெகிழ்வான தருணங்களின் முடிச்சை ஒரு நகைச்சுவையால் அவிழ்க்க வைத்து படத்தை சிறிதும் தொய்வில்லாமல் நகர்த்திச் செல்கிறது திரைக்கதை. பெரும் செலவு எதுவும் இன்றி இயல்பான மனிதர்களைக் கதாப்பாத்திரங்களாக உலவ விட்டிருப்பதும் அந்த ஒவ்வொரு பாத்திரத்துக்கும் முக்கியத்துவம் வழங்கி இந்த டூரிஸ்ட் பேமிலியுடன் இணைத்திருப்பது அருமை என்று சொல்ல வைக்கிறது. படத்தின் ஆரம்பத்தில் வரும் சிறு சிறு காட்சிகளை இறுதிக் காட்சியின் முன்னே இணைத்திருப்பது இயக்குநரின் புத்திசாலித்தனம்.

சசிகுமார் சற்றே தனது இயல்பிலிருந்து விலகி தனது பாத்திரம் உணர்ந்து நடித்திருக்கிறார். மனைவியுடன் காதலில் உருகும் போதும், தனது மகனுடனான பிணக்குக்குப் பின்னே உடைந்து உருகி நடனம் ஆடுவது என அற்புதமான இயல்பான நடிப்பை வழங்கி இருக்கிறார். சிம்ரன் குடும்பத்தை அரவணைத்துச் செல்லும் குடும்பத் தலைவியாகக் குறை இல்லாத நடிப்பு. மலையாள நடிகர் மிதுன் (ஆவேஷம் புகழ்) அப்பாவிடம் உள்ள பிணக்கையும் அதைத் தாண்டி அவர் மேல் வைத்துள்ள பாசத்தையும் வெளிப்படுத்தும் இடம், அருமை!

படத்தின் நெகிழ்வான தருணங்களை வளரவிடாமல் அதற்கு ஒரு சிரிப்பு முற்றுப்புள்ளி வைப்பது குடும்பத்தின் கடைக்குட்டி முள்ளியாக நடித்துள்ள கமலேஷ் தான். ஆண் நாயை ஜென்னி என்று பொய் சொல்லி காவலரை உணர்வு ரீதியாகத் தாக்குவதாகட்டும், மங்கை (ஸ்ரீஜா ரவி) இறப்பின் நினைவு நாளன்று “எல்லாரும் அவங்கள விட்டுட்டு உங்களைத்தான் அதிகம் புகழராங்க, நியாயமா அங்க இருக்க வேண்டியது உங்க போட்டோதான் நான் வீட்டுக்குப் போய் எடுத்துட்டு வரேன்” எனச் சலம்புவதாகட்டும், தனது தந்தைக்கும் அண்ணனுக்கும் நடுவே நடக்கும் சண்டையை ‘மலையூரு நாட்டாமை ...’ பாடலுக்கு நடனம் ஆடி முடித்து வைப்பதாகட்டும், எங்கும் முள்ளி ராஜ்ஜியம்.

யோகி பாபு சிரிக்க வைத்தாலும் மற்றவர்களைக் கண்டபடி திட்டி நகைச்சுவை செய்வது சற்றே நெருடல். கேசவன் நகர காலனியின் மாந்தர்களில் தனித்து நடிப்பில் அழுத்தமாக தங்கள் முத்திரையை பதித்திருக்கிறார்கள், இளங்கோ குமரவேல், ஸ்ரீஜா முரளி தம்பதி.

அரவிந்த் விஸ்வநாதனின் உறுத்தாத ஒளியமைப்பு, ஷான் ரோல்டனின் திகட்டாத இசை, இரண்டும் படத்திற்கு பலம். ‘முகை மழை’ பாடலின் தமிழுக்காக கவிஞர் மோகன் இராஜனுக்கு வந்தனம். எங்கும் அலுப்பு தட்டாமல் காட்சிகளைக் கோர்த்துள்ளார் பரத் விக்ரமன்.

அபிஷன் ஜீவிந் எளிமையான காட்சிகளின் மூலம் மனித நேயத்தை சிறு சிறு அத்தியாயங்களாகச் சொல்லி அதனைக் கோர்த்த விதம் மிக அற்புதமான திரைக்கதை, இயக்கம் அபிஷன் ஜீவிந்.

யோகி பாபு என்ன வேலை செய்கிறார்? அவருக்கு எப்படி டிரைவிங் லைசன்ஸ் முதல் ஆதார் அட்டை வரை அவ்வளவு எளிதாகக் கிடைக்கிறது?, இவர்கள் இலங்கைத் தமிழர்கள் என்று இவர்கள் மொழியை வைத்து கண்டுபிடிக்காமல் அவ்ளோ தத்தியாகவா ஒரு காவலர் இருப்பார்? போன்ற ஓட்டைகள் படத்தில் இருந்தாலும், அந்த ஓட்டைகளை அன்பு அடைத்துவிடுகிறது.

இறுதியில் அந்தக் காவலர் ‘அகதியா யார்யா சொன்னாங்க’ என்று கேட்டதும் சசிகுமாரை அரவணைத்துச் செல்ல ஒரு கூட்டம் உணர்த்து கிறதே... அதைப்போல இந்தப் படத்தை அரவணைத்துக் கொள்வார்கள் இரசிகர்கள். ◆

படைப்பும் படைப்பாளியும்: வாசகர் பார்வை

கு. அழகிரிசாமி அவர்களின் "அன்பளிப்பு"

சாகித்ய அகாடமி விருது பெற்ற 20-ஆம் நூற்றாண்டின் சிறந்த சிறுகதை எழுத்தாளர்களில் ஒருவர் திரு. கு. அழகிரிசாமி அவர்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில்பட்டிக்கும் கயத்தாறுக்கும் இடையில் உள்ள இடைசெவல் என்ற ஊரில் பிறந்தவர். 47 ஆண்டுகளே வாழ்ந்த கு. அழகிரிசாமி அவர்கள் பல நூல்கள் மற்றும் கதைகளை எழுதியது அவருடைய கடும் உழைப்பை வெளிப்படுத்துகிறது. ஒரு பள்ளி ஆசிரியராக பணியைத் தொடங்கிய அழகிரிசாமி அவர்கள் சக்தி இதழ் மூலம் பத்திரிக்கைத் துறையில் முழு நேர பத்திரிகையாளராக, எழுத்தாளராகத் தன்னை வளர்த்துக் கொண்டார்.

இவர் எழுதிய முதல் சிறுகதை "உறக்கம் கொள்வோம்" என்ற தலைப்பில் வெளிவந்தது. புதுமைப்பித்தனைப் போல பத்திரிக்கைத் துறையிலும், படைப்பு இலக்கியத் துறையிலும் ஒரே நேரத்தில் ஈடுபட்டவர். மலேசியா சென்று 'தமிழ் நேசன்' என்ற இதழிலும் ஆசிரியராகப் பணிபுரிந்தார். கதைகள் மட்டுமின்றி ஓவியம், கவிதை, கீர்த்தனை எனப் பலவற்றில் சிறந்து விளங்கினார்.

சென்ற இதழ்களில் மிக ஆழமான தர்க்கக் கேள்விகள் கொண்ட கதைகளை அலசிய நாம், இந்த இதழில் குழந்தைகளின் உலகத்தைத் தொட்டுச் செல்லும் திரு. கு. அழகிரிசாமி அவர்கள் எழுதிய "அன்பளிப்பு" என்ற கதையைக் காண்போம்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தானே என்று, அவன் இரவு வெகு நேரம் கண்விழித்து படித்துக் கொண்டிருந்தான். அதனால் தூங்கும் பொழுது இரவு இரண்டு மணி ஆகிவிட்டது. எனவே, காலையில் இன்னும் சுகமாக தூங்கிக் கொண்டிருந்தபோது, "தூங்குமூஞ்சி மாமா! எழுந்திருங்க! நேரமாச்சு!" என்று நான்கு, ஐந்து குழந்தைகள் அவனை எழுப்பினார்கள்.

சுந்தரராஜனுக்கு 13 வயது, சித்ராவுக்கு 9 வயது. இவர்கள் அவனது பக்கத்து வீட்டுக் குழந்தைகள். பிருந்தாவும், தேவகியும் சித்ராவின் பள்ளித் தோழிகள். சாரங்கன், சுந்தரராஜனின் நண்பன். இந்தச் சிறுவர்கள்தான் இப்பொழுது அவனை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

ஞாயிற்றுக்கிழமை குழந்தைகள் அவனை எழுப்புவதற்கான காரணம்—அவன் புதிய புத்தகங்களைக் கொண்டு வந்துள்ளானா என்பதைக் கேட்பதற்காக. அவன், "புத்தகம் கொண்டு வரவில்லை!" என்று விளையாட்டாகச் சொன்னவுடன், குழந்தைகள் செய்த அமர்க்களம் கதையில் அருமையாக விவரிக்கப்படுகிறது.

அவன் கொண்டு வந்த ஏழு புத்தகங்களில், 'என் பிரியமுள்ள சித்ராவுக்கு அன்பளிப்பு'

திரு. கமலபாரதி பச்சியப்பன்

என்று எழுதியும், மீதி ஆறு புத்தகங்களில் 'என் பிரியமுள்ள சுந்தரராஜனுக்கு அன்பளிப்பு' என்றும் கையெழுத்து போட்டுக் கொடுத்தான். “சித்ராவிடமிருந்தும் சுந்தரராஜனிடமிருந்தும் புத்தகங்களை வாங்கிப் படியுங்கள்” என்று சொல்லிவிட்டான். அனைத்து குழந்தைகளும் அவன் சொல்வதைக் கேட்டு ஒத்துக் கொண்டார்கள்.

அவன் எல்லா குழந்தைகளிடமும் ஒரே அளவுக்கு அன்பாக இருந்தாலும், சுந்தரராஜனும் சித்ராவும் முதலில் அவனுக்கு அறிமுகமானவர்கள் என்பதால், அவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பது அவனுக்கு வழக்கமான செயலாக இருந்தது.

இவ்வாறு நடந்ததற்குப் பிறகு, இரண்டு வாரமாக பிருந்தா மட்டும் வரவில்லை. அவளுக்குக் காய்ச்சலாக இருந்தது. அவனுக்கு குழந்தைகளைத் தெரியும் ஆனால், அவர்களின் பெற்றோர்களிடம் பழக்கம் இல்லை. அதனால், நேராகப் போய் பிருந்தாவை பார்க்காமல், “குணமாகிவிடுவாள்” என்று நம்பிக்கையுடன் காத்துக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் மாலை பிருந்தாவின் வீட்டு வேலைக்காரன் இவன் வீட்டு வழியாகச் செல்லும் பொழுது பிருந்தாவிற்கு எப்படி இருக்கிறது எனக் கேட்டான். அந்த வேலைக்காரன் காய்ச்சல் இன்னும் அதிகமாக இருக்கிறது என்றும், காய்ச்சலில் கூட உங்களைப் பற்றி கேட்கிறாள், புத்தகம் மாமா! புத்தகம் மாமா! என சொல்லிக் கொண்டிருக்கிறாள் என வேலைக்காரன் சொன்னான்.

அந்த வேலைக்காரன் சொன்னது இவனை மிகவும் பாதித்தது மறுநாள் காலை முதல் வேலையாக பிருந்தா வீட்டிற்குச் சென்றான். பிருந்தாவின் பெற்றோர்கள் உள்ளே வரும்படி சொன்னார்கள். கட்டிலின் அருகில் அமர்ந்து பிருந்தா! என்று அவன் அழைத்தான். பிருந்தா கண் விழித்துப் பார்த்தாள். மாமா!! என்று உரக்கக் கூறினாள் பிருந்தாவின் அம்மா எப்பொழுதும் உங்களைப் பற்றித் தான் கேட்டுக் கொண்டிருக்கிறாள் என்று சொன்னாள். உடல்நலமில்லாத போதும் பிருந்தா பொழிந்த அன்பு அவன் மனதைக் கரைத்தது. இப்படியாக அடுத்த சில நாட்களுக்குப் பிருந்தா வீட்டுக்குச் சென்று வரும்போது சாரங்கன் வழியில் பார்த்தான். எங்கள் வீட்டுக்கும் வாங்க மாமா என சாரங்கன் அழைத்தான்.

எல்லா பெரியவர்களைப் போலவே இவனும், “நான் எப்படி சாரங்கன் வீட்டுக்கு போவது?” அவன் பெற்றோரைத் தெரியாதே, என்ற தயக்கத்தினால் சாரங்கன் வீட்டுக்குச் செல்வத்தைத் தவிர்க்க முயன்றான். ஆனால் சாரங்கன் மிகவும் வற்புறுத்தியதால் ஞாயிற்றுக்கிழமை வருகிறேன் என ஒரு சாக்குச் சொல்லி கடந்து சென்றான். சனிக்கிழமை மீண்டும் குழந்தைகள் வந்த பொழுது புது வருடத்துக்கு இரண்டு டைரிகள் வாங்கி வந்திருந்தான்.

வழக்கம் போல சுந்தருக்கும் சித்ராவிற்கும் அன்பளிப்பு எழுதிக் கைகளில் கொடுத்தான் மற்ற குழந்தைகள் டைரி வேண்டும் எனக் கேட்கவில்லை, அவர்களுக்கு அது பழகி இருந்தது. சாரங்கன் மட்டும் இரகசியமாக மாமா நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை எங்க வீட்டுக்கு வருவீங்கதானே எனக் கேட்டான். இவனும் சரி பார்க்கலாம் என்று சொன்னான்.

மறுநாள் பிருந்தா மட்டும் வந்தாள். நேற்று சாரங்கன் வீட்டுக்கு செல்லும்போது வால்ட் விட்மன் புத்தகம் வேண்டும் என்று கேட்டதும், அது சாரங்கனுக்கு இப்போது படிக்க முடியாது என்று சொன்னதால் அழுது சென்ற ஞாபகம் வந்தது அவனுக்கு. பிருந்தாவிடம் சாரங்கன் எங்கே எனக் கேட்டான், அவளுக்குத் தெரியவில்லை. சிறிது நேரம் கழித்து சாரங்கன் வந்தான், சந்தோஷமாகவே வந்தான் அது அவனுக்குக் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது.

சாரங்கன் வந்தவுடன் மாமா வாங்க வீட்டுக்குப் போகலாம் என்றான். அவனுக்கு மிகவும் சங்கடமாகப் போய்விட்டது எப்படி ஒரு சிறு பிள்ளை பேச்சைக் கேட்டு அங்கே போவது அவன் பெற்றோரை இதுவரை இவனுக்கு தெரியாது. ஏன் மாமா வாங்க மாமா என்று கெஞ்சினான் எங்கே மீண்டும் அழுது விடுவானோ என நினைத்து சரி வருகிறேன் எனக் கிளம்பினான். சாரங்கன் கையை கோர்த்துக்கொண்டு அவன் வீட்டுக்குக் கூட்டிச் சென்றான்.

வீட்டில் நுழைந்ததும் முன் அறையில் அமரச் சொல்லிவிட்டு சாரங்கன் உள்ளே ஓடினான். சாரங்கன் உள்ளிருந்து ஒரு தட்டில் உப்புமாவும் ஒரு டம்ளரில் காப்பியுமாக வந்து சேர்ந்தான். அவனுக்கு மிகவும் திடுக்கிட்டு விட்டது. இந்தப் பையனுக்கு எவ்வளவு அன்பு! இந்தத் தொந்தரவு, அன்பின் மிகுதியைக் காட்டுகிறது என நினைத்தான். எந்த பெரிய முயற்சியும் எடுக்காமல் ஒரு குழந்தையை மகிழ்ச்சியாக திருப்தியாக இருக்க வைக்க முடிகிறது என்றால் அது தொந்தரவாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ளலாம் எனத் தேற்றிக் கொண்டான்.

சாரங்கன் இப்போது வெளியே வந்தான். மேசையைத் திறந்து ஒரு பேனாவை எடுத்தான், அவன் கால்சட்டையின் பையிலிருந்து ஒரு டைரியை எடுத்தான். சுந்தரராஜனுக்கும் சித்ராவுக்கும் அன்பளிப்பாக கொடுத்த டைரிகளைப் போன்ற நிறமுடைய டைரி, அதே கம்பெனியில் செய்தது. சாரங்கன் அவன் கையில் பேனாவை கொடுத்து எழுதுங்கள் என்று சொன்னான், அவன் எனக்கு ஒன்றுமே புரியவில்லையே என்றான். என்ன எழுத? என சாராங்கனைக் கேட்டான்.

"என் பிரியமுள்ள சாரங்கனுக்கு அன்பளிப்பு" என்று எழுதுங்கள் என்றான்.

இவ்வாறு இந்த அன்பளிப்புக் கதை முடிகிறது. குழந்தைகளின் ஆழமான அன்பு, அவர்கள் உளவியல், பெரியவர்கள் குழந்தைகளோடு நட்பாகப் பழகுவதின் முக்கியத்துவம் எனப் பல்வேறு பரிணாமங்களை ஆசிரியர்கள் நமக்கு மிகவும் ஆழமாக இந்தக் கதை மூலம் உணர்த்துகிறார். வாசகர்களே நான் முயற்சித்தது கதைச் சுருக்கமே, நீங்கள் நிச்சயமாக முழுமையாக இந்தக் கதையை வாசிப்பீர்கள் என மனப்பூர்வமாக நம்புகிறேன் ..

https://azhiyasudargal.blogspot.com/2011/04/blog-post.html?m=1

◆

தமிழோடு விளையாடு!

I விடைகள்:

1.நட்டம்
2.நாட்டம்
3.வட்டம்
4.வாட்டம்
5.சுற்றம்
6.பட்டம்
7.ஆட்டம்
8.பாட்டம்
9.மட்டம்
10.சட்டம்

II விடைகள்:

1.தலை
2.கலை
3.மலை
4.வலை
5.சிலை

KALPASI
INDIAN CUISINE
FLAVORS OF CHETTINAD

சமகால தமிழ் எழுத்தாளர், கவிஞர், பெண் அரசியல்வாதி, சமூக ஆர்வலர், ஆகச்சிறந்த

பெண்ணியவாதி சல்மா

ருக்கியா மாலிக் என்ற சல்மா ஒரு முக்கியமான சமகால தமிழ் எழுத்தாளர், கவிஞர், பெண்ணியவாதி, சமூக ஆர்வலர், ஆகச்சிறந்த பெண் அரசியல்வாதி ஆவார். தமிழ் இலக்கியத்தில் தனது துணிச்சலான மற்றும் சக்திவாய்ந்த குரலுக்குப் பெயர் பெற்றவர். தமிழ்நாட்டின் துவரங்குறிச்சி என்ற சிறிய நகரத்தில் பிறந்தவர். இராஜாத்தி சம்சுதீன் என்ற புனைப்பெயரைக் கொண்டவர். மேலும், குறிப்பாக பழமையான மதவாத சமூகங்களில் உள்ள பெண்களின் உள் வாழ்க்கை, போராட்டங்கள் மற்றும் அடையாளங்களைப் பற்றி எழுதியதற்காக முக்கியத்துவம் பெற்றார்.

அவரது கவிதை மற்றும் புனைக்கதை பெரும்பாலும் பாலினம், பாலியல், வீட்டுச் சிறைவாசம் மற்றும் சமூக அநீதி போன்ற கருப்பொருள்களை ஆராய்கின்றன. அவரது குடும்பம் மற்றும் சமூகத்தின் கட்டுப்பாடுகளை எதிர்கொண்ட போதிலும், சல்மா அங்கீகாரம் பெறுவதற்கு முன்பு பல ஆண்டுகளாக இரகசியமாக எழுதுவதைத் தொடர்ந்தார். அவரது முதல் நாவலான "இரண்டாம் ஜாமங்களின் கதை" , பின்னர் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு பரவலாகப் பாராட்டப்பட்டது. இதனுடைய ஆங்கில மொழியாக்கம் ஆசிய படைப்புகளுக்கான புக்கர் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட முதல் தமிழ் நூலாக இருந்தது.

சல்மா, தமிழ்நாடு சமூக நல வாரியத்தின் தலைவர் உட்பட பொது வாழ்க்கையிலும் பணியாற்றியுள்ளார். அவரது வாழ்க்கை மற்றும் பணி பலரை ஊக்கப்படுத்தி யுள்ளது, மேலும் பெண்களின் உரிமைகளுக்காகப் பேசுவதில் அவரது துணிச்சல் அவரை இலக்கிய மற்றும் மனித உரிமைகள் வட்டாரங்களில் மதிக்கப்படும் நபராக மாற்றியுள்ளது.

குடும்பக் கட்டுப்பாடுகளால் எட்டாம் வகுப்பு வரை தான் இவரால் படிக்க முடிந்தது. இருந்தாலும் தனது ஒன்று விட்ட சகோதரன் மனுசபுத்திரன் (ஷாஹுல் ஹமீது) அவர்களின் உதவியோடு நிறைய புத்தகங்களைப் படித்தார். அது அவரது சிந்தனையின் வாசல்களைத் திறந்தது எனக் கூறலாம். மேலும் அவரது வாழ்வை அடுத்த கட்ட வளர்ச்சிக்கு எடுத்துச் சென்றது

எனக்கூறலாம். இவரது படைப்புகள் பெண்களின் அக உலகையும், அவர்களின் தனிமையையும் பொருளாகக் கொண்டதாக இருந்தது.

1995 ஆம் ஆண்டு அவருக்கு திருப்பு முனையாக இருந்தது தமிழின் முன்னோடி எழுத்தாளர்களுள் ஒருவரான சுந்தர இராமசாமியின் அறிமுகம். அவரின் அறிவுரை, ஊக்கம், வழிகாட்டுதல் சல்மாவை எழுத்துலகில் அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் சென்றது.

அவர் தனது முதல் கவிதைத் தொகுப்பை ஒரு மலையும், இன்னொரு மலையும் என்ற பெயரில் 2000 ஆம் ஆண்டில் வெளியிட்டார். அதே ஆண்டில், சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாடு என்ற மூன்று நாள் முக்கிய இலக்கிய நிகழ்வுக்கு அவர் அழைக்கப்பட்டார். 2001 ஆம் ஆண்டு, பொன்னம்பட்டியில் நடந்த பஞ்சாயத்து (உள்ளாட்சி) தேர்தலில் சல்மா போட்டியிட்டு, பின்னர் பஞ்சாயத்துத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திருமதி ரஹீமா அலாவுதீன்

2002 ஆம் ஆண்டு, இலங்கையில் நடைபெற்ற சர்வதேச பெண்கள் உரிமைகள் மாநாட்டிற்கு அவர் அழைக்கப்பட்டார். 2003 ஆம் ஆண்டு தனது இரண்டாவது கவிதைத் தொகுப்பான தேவதையை வெளியிட்டார், மேலும் 2004 ஆம் ஆண்டு தனது இரண்டாம் ஜாமங்களின் கதை என்ற நாவலை வெளியிட ஒப்புக்கொண்டார். இந்த நாவல் ஒரு அரை சுயசரிதைப் படைப்பாக விவரிக்கப்பட்டது, மேலும் அவர்களின் மரபுகள் மற்றும் சடங்குகளை உறுதியாகப் பற்றிக்கொண்ட ஒரு மரபுவழி சிறுபான்மைச் சமூகத்தில் பிறந்த இரபியா என்ற இளம் பெண்ணின் வாழ்க்கை மற்றும் கஷ்டங்களை சித்தரித்தது.

உள்ளாட்சித் தேர்தல்களில் பெண்களுக்கு 50% இடஒதுக்கீட்டை நிறுவியதற்காகவும், பெண்கள் பிரச்சினைகளில் கவனம் செலுத்தியதற்காகவும் முதல்வர் கருணாநிதியால் தான் ஈர்க்கப்பட்டதாகவும், அவரை “முன்னேற்றக் கவிஞர்” என்று அவர் அழைக்கிறார் என்றும், இது இறுதியில் 2004 இல் அரசியலில் சேர வழிவகுத்தது என்றும் சல்மா கூறுகிறார். அரசியலில் சேர்ந்த பிறகு, கட்சியின் மகளிர் பிரிவின் துணைச் செயலாளராக நியமிக்கப்பட்டார். 2006 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில், மருங்காபுரித் தொகுதியில் வேட்பாளராகப் போட்டியிட கட்சி அவரைப் பரிந்துரைத்தது. மாநில சமூக நல அறக்கட்டளையின் தலைவராக அவர் நியமிக்கப்பட்டார். தலைவராக இருந்த காலத்தில், சல்மா பல நலத் திட்டங்களை நிறுவுவதற்கும், திருநங்கைகளின் உரிமைகளுக்கான முக்கிய திட்டங்களாகக் கருதப்படும் பல முயற்சிகளைத் தொடங்குவதற்கும் அவர் வாதிட்டார். குடும்ப வன்முறைச் சட்டத்திற்கான விழிப்புணர்வு பிரச்சாரத்தைத் தொடங்குவதிலும், காவல்துறையினர், ஆலோசகர்கள், நீதிபதிகள் மற்றும் பெண்கள் மத்தியில் பயிற்சித் திட்டங்களை நடத்துவதிலும் அவர் முக்கியப் பங்கு வகித்தார். 2010 ஆம் ஆண்டில், சல்மா சென்னையைத் தளமாகக் கொண்ட அரசு சாரா அமைப்பான “உங்கள் நம்பிக்கை மீதமுள்ளது” என்ற அமைப்பை நிறுவினார். மேலும் பாலின சமத்துவத்தை ஊக்குவிக்கும் முயற்சியில் கிராமப்புற பெண்கள் மத்தியில் ஒரு சமூகப் பணியாளராகப் பணியாற்றத் தொடங்கினார். 2011 ஆம் ஆண்டில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்து நீக்கப்பட்டபோது, மாநில சமூக நல அறக்கட்டளையின் தலைவர் பதவியை இழந்தார்.

இதற்கிடையில், அவரது சிறுகதைத் தொகுப்பான ‘சாபம்’ 2009 இல் வெளியிடப்பட்டது. இதை கல்யாண் இராமன் ஆங்கிலத்தில் ‘தி கர்ஸ்: ஸ்டோரிஸ்’ என மொழிபெயர்த்தார். 2016 இல், அவர் தனது இரண்டாவது நாவலான மனமியாங்கல்- ஐ வெளியிட்டார். இது மெஹர் மற்றும் பர்வீன் என்ற இரண்டு பெண்களின் இணையான வாழ்க்கையை விவரித்தது. இந்துஸ்தான் டைம்ஸின் மதிப்பாய்வில், இந்த நாவல் ஹெலீன் சிக்ஸஸின் “பெண்பால் எழுத்துப் பயிற்சியை” படம்பிடித்ததாக விவரிக்கப்பட்டது. இது மீனா கந்தசாமியால் பெண்கள், கனவு காண்பது என்ற தலைப்பில் தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கப்பட்டது.

சமூகத்திலிருந்து ஒருவர் பெறும் எழுத்து என்பது ஒரு அரசியல் செயல் என்ற நிலைப்பாட்டை சல்மா கொண்டுள்ளார். இது அரசியல் சிந்தனையை வெளிப்படுத்தும் ஒரு வழிமுறையாக மாறுகிறது. அவரது எழுத்துகள் பல சந்தர்ப்பங்களில் அவற்றில் ஒரு பெண்மையின் கண்ணோட்டத்தைப் படம்பிடிப்பதாக விவரிக்கப்பட்டுள்ளன. அவரைப் பொறுத்தவரை, ஒரு பெண்ணுக்கு “நன்கு வரையறுக்கப்பட்ட ஒழுக்கம்” என்ற பிரபலமான கருத்து அவளுடைய உடலையும் மனதையும் அடக்குவதற்கு வழிவகுக்கிறது, மேலும் அவரது பார்வையில், ஒழுக்கம் என்பது அன்பைப் பற்றியது, ஒருவர் மக்களை மகிழ்விப்பதற்கும் அவர்களை காயப் படுத்துவதற்கும் முன்னுரிமை அளிக்கிறாரா என்பது பற்றியது. பெண்கள் திருமணம் செய்து கொண்டு இல்லத்தரசிகளாக மாற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும், குடும்பத்தைப் பராமரிப்பது இரு கூட்டாளிகளின் கூட்டுப் பொறுப்பாக

இருக்க வேண்டும் என்றும் அவர் கூறுகிறார். மேலும் பெண்கள் பயமின்றித் தேர்ந்தெடுத்து செயல்பட சுதந்திரம் தேவை என்றும், அதற்கு ஆணின் அனுமதி தேவையில்லை என்றும் கூறுகிறார். பெண்களுக்கான முகக் கவசத்தைப் பொறுத்தவரை, ஆடை அணிவது பெண்களின் தனிப்பட்ட விருப்பம் என்றும், எதை அணியலாம் அல்லது எதை அணியக்கூடாது என்பதை ஆணையிட யாருக்கும் உரிமை இல்லை என்றும் அவர் நிலைப்பாட்டை எடுத்துள்ளார்.

தன்னை ஒரு பெண்ணியவாதியாகக் கருதுகிறீர்களா என்று கேட்டபோது, சல்மா தன்னை ஒரு பெண்ணியவாதியாக அடையாளப்படுத்திக் கொள்ளவில்லை, ஆனால் ஒரு பெண்ணியவாதி என்று அழைக்கப்படுவதை எதிர்க்கவில்லை என்று கூறுகிறார். கடந்த காலத்தை விட பெண்களுக்கு அதிக வாய்ப்புகள் இருந்தாலும், சமூகத்தால் அவர்கள் இன்னும் ஆண்களுக்கு சமமாகப் பார்க்கப் படுவதில்லை என்று அவர் கூறுகிறார். இந்தியாவில் மீடூ இயக்கத்திற்கு ஆதரவாகவும் அவர் குரல் கொடுத்துள்ளார். இது நீண்ட காலமாகத் தாமதமாகி வருவதாகவும், பணியிட துன்புறுத்தலுக்கு எதிராகப் பேச பெண்களுக்கு தைரியம் அளித்துள்ளதாகவும் அவர் கூறுகிறார். [2] 2015 முதல், சல்மா இந்தியாவில் எல்ஜிபிடி இயக்கத்திற்கும் வெளிப்படையான ஆதரவை அளித்து வருகிறார். சல்மாவின் வாழ்க்கையை கிம் லாங்கினோட்டோ தனது ஆவணப்படமான சல்மாவில் விரிவாக ஆவணப்படுத்தியுள்ளார். இது வீட்டுக் காவலின் பயனுள்ள வடிவத்திற்கு உட்படுத்தப்பட்டு பாராட்டப்பட்ட தமிழ் இலக்கிய நபராக மாறிய ஒரு குறைந்த கல்வியறிவு பெற்ற இல்லத்தரசியின் பயணம் என்று விவரிக்கப்படுகிறது. லாங்கினோட்டோ சல்மாவை "அசாதாரண நம்பிக்கையின் கலங்கரை விளக்கம்" என்று வர்ணித்தார். 2013 இல் திரையிடப்பட்ட இந்த ஆவணப்படம் பல விருதுகளைப் பெற்றது மற்றும் பதினோரு நாடுகளில் காணப்பட்டது.

இந்திய பத்திரிகையான தி வீக் அதன் சிறப்புக் கட்டுரைகள் ஒன்றில் சல்மாவுக்கு "விடாமுயற்சியின் சின்னம்" என்ற பட்டத்தை வழங்கியது. அவரது படைப்புகள் பாராட்டப்பட்ட இலட்சுமி ஹோம்ஸ்ட்ரோமால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. மேலும் சுகிர்தராணி, மாலதி மைத்ரி மற்றும் குட்டி ரேவதி போன்றவர்களுடன் இடம் பெற்றுள்ளன. 2019 இல் ஜெய்ப்பூர் இலக்கிய விழாவில் மகாகவி கன்ஹையலால் சேதியா விருதின் நான்காவது பதிப்பை சல்மா பெற்றார். பன்முகத் திறமை கொண்ட எழுத்தாளர் சல்மா அவர்களின் எழுத்து மற்றும் சமூகப்பணி மென்மேலும் வளர தென்றல் முல்லைக்குழு வாழ்த்துகிறது. ◆

UNIEX
COURIER
BUY & SHIP 4 U
Proud Courier Partner Of World Tamil Conference , USA
முத்தமிழ் விழா
வாழ்த்துகள்
Offer
Discount
Code
SATS
TAMILNADU TO USA COURIER
10kg Rs 875 per kg
13kg Rs 800 per kg
30kg Rs 750 per kg
+91 93808 39266
www.uniexcourierandcargo.com
COURIER
CARGO
PACKERS & MOVERS
BAGGAGES
•Best Price •Pickup Facility •Live Tracking
Packing Facility •Reliable Service •Customer Service
* DELIVERY 4 TO 7 DAYS

உலகத் தமிழிசைப் பல்கலைக்கழகம்

World Tamil Music University

(தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)

IDS

Innovative Dynamic Solutions Global Inc.

ISOME

உலகத் தமிழிசை மேம்பாட்டு மையம்

WORLD TAMIL MUSIC DEVELOPMENT CENTER



BABU VINAYAGAM

PRESIDENT

Office:
13800 Coppermine Rd,
Herndon, VA - 20171
www.idsglobalinc.com

Email:
babu@idsglobalinc.com
Work: 703-880-6749
Mobile: 703-939-5465



Your neigborhood DMV2K Realtor in VA & MD

All my Commission is yours except 0.5% -1%

*Restrictions Apply

Umadevi Natarajan
Senthil Kumar
+1 703 932 5240
dmv2krealtor@gmail.com

IKON
Ikon Realty of Ashburn
(703) 723 3434
44355 Premier Plaza #110, Ashburn, VA 20147

* Buyer needs to pay additional $500 Broker Admin Fee per transaction

****

EQUAL HOUSING OPPORTUNITY

Licensed in VA, MD, PA, NJ, GA, TX, AZ, CO, MN

VM VEMA Mortgage LLC

Call me Today for Special Rates on Purchase & Refinance!

Scan here to get daily updates on mortgage rates

SENTHIL KUMAR
NMLS # 2494030
C: +1 425 503 5147
SENTHILKUMAR@VEMAMORTGAGE.COM

VEMA MORTGAGE LLC
NMLS # 1019911

****

ACUPUNCTURE WELLNESS CENTER

Ashburn, VA

Umadevi Natarajan

Traditional Acutouch Therapist

+1 469 353 9425

anbuthirucoil@gmail.com

Board Certified Holistic Health Practitioner

Certificate Number: 271534401